# வைத்தீஸ்வரம்
# 2023
# Vaitheeswaram



வல்லவாம்பிகா ஶ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமி கோயில்



உ

சிவமயம்

வல்லவாம்பிகா ஸ்ரீ தையல் நாயகி சமேத வைத்தியநாத சுவாமி கோயில்

# வைத்தீஸ்வரம்

# 2023

Vallavaambia Sri Thaiyalnayaki Sametha Vaithiyanatha Swami Koil

# VAITHEESWARAM

# 2023

## ஒட்டாவா சிவன் கோயில் OTTAWA SIVAN TEMPLE

2104 Roger Stevens Drive, North Gower,
Ontario K0A 2T0, Canada.

Telephone: 613-489-1774
email: info@ottawasivantemple.com
www.ottawasivantemple.com

July 2023

**ஓம் நமசிவாய!**

வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியின் கிருபையினாலே அலங்காரத் திருவிழா இவ்வருடம் ஆனித் திங்கள் 23ம் நாள் (07-07-2023) திகதி தொடங்கி 11 நாட்கள் சிவனடியார்களால் பக்தியுடன் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்வருடம் சிவன் கோயிலின் "வைத்தீஸ்வரம் – 2023" எனும் சஞ்சிகையை ஆண்டு மலராக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இம் மலரில் பெரியோர்களினது ஆசிச் செய்திகளும், சிவன் கோயில் நிர்வாகத்தின் அறிக்கைகளும், புதிய நிர்மாணத்தில் சிவன் கோயில் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையும், சென்ற வருட கோயில் கணக்கு அறிக்கையும், தலைவரின் செய்தியும், சைவ சமய, ஆன்மீகக் கட்டுரைகளும்;

வைத்தியநாத சுவாமியின் கிருபையினால் இக் கோயில் மேலும் மேலும் வளர்ந்து சிவனடியார்க்கு சிறந்த சேவை நல்க கீழ்க்காணும் காரணிகள் மேன்மையுற வேண்டுமென சிவனைத் தொழுது அடியார்க்கு விண்ணப்பிக்கின்றோம்:

1) கோயிலில் தினப்பூசை உபயம் செய்யும் அடியார்கள் தொகை உயர்வடைந்து அதனால் கோயில் அங்கத்தவர் எண்ணிக்கை உயர்தல் வேண்டும்.

2) எம்பெருமான் வைத்தியநாத சுவாமிக்கும் வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கும் அவர் தம் பரிவார மூர்த்திகளுக்கும் சைவாகம முறைப்படி கூடிய விரைவில் கோயில் எழ இருக்கிறது.

3) கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் அமையும் இக்கோயிலின் அருமை பெருமை பற்றி அறிந்து கனடா வாழ் சைவ மக்கள் அனைவரும் இக்கோயிலில் இருந்து அருள்பாலிக்கும் வல்ல வாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்திய நாத சுவாமியைத் தரிசித்து அருள்பெற வேண்டுகின்றோம்!

**AUM NAMASHIVAAYA!**

By the grace of Vallavambika Sri Taiyalnayaki Sametha Vaithiyanatha Swamy this year devotees of Ottawa Sivan Temple are celebrating the (Alakath Thiruvizha) annual festival for 11 days starting from Friday July 7, 2023.

We have the pleasure to release the Temple Magazine: Vaitheeswaram 2023.. The magazine contains Greeting messages from Sivachariyars (Priests), Prime Minister of Canada, Member of Parliaments, Premier of Ontario Provice Government and North Gower Councilor. It also contains articles written by prominent people and devotees. In addition, the magazine also embodies Sivan Temple President's message, last year 2022 accounts report, Progress report on New Temple Building Project.

By the grace of Vaithiyanatha Swamy, we pray that this Temple in the Capital of Canada develops to provide much more services to the communities living in Ottawa with the support from devotees in the following areas:

1) Number of members of the Temple should increase significantly by more devotees coming forward to perform Day Poojas.

2) New Building to Ottawa Sivan should be built in the near future with the full support from devotees.

3) All Saivites and Hindu devotees living in North America and visitors to Canada should come to know about the name & fame of Ottawa Sivan Temple and visit this Temple to appreciate our Art and culture of the Temple and to get blessed by Vaithiyanatha Swamy.

உ

சிவமயம்

**ஒட்டாவா சிவன் ஆலய பிரதமகுரு ஆசிச் செய்தி.**



விண்ணுக்கு ஒரு மருந்தாய் நாலு வேதங்களின் பொருளாய் கண்ணுக்கு இனியவனாய் மனம் உருகி வழிபடும் அடியவர்களுக்கு அருளினை அள்ளி வழங்கும் தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்திய நாதர் சுவாமி.

ஒட்டாவா சிவன் கோயில் என்று அடியார்களால் போற்றப்படும் இவ் ஆலயம் சிவாகம முறைப்படி புதிய ஆலயம் அமைக்கும்பணி மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டும்.

மனிதர்களாக பிறந்த நாம் இப் புவியில் பிறந்த பயனை இப் புதிய ஆலயம் அமைக்கும் திருப்பணியில் பங்குபற்றி வைத்தீஸ்வரரின் அருளைப் பெற்று பிறவிப் பயனை அடைய வேண்டும்.

உலக மக்கள் அனைவரும் நலமுடன் வாழ தையல்நாயகி சமமேத ஸ்ரீ வைத்ததியநாதர் சுவாமியின் பாதம் பணிவோமாக.

என்கடன் சிவன் பணி செய்து கிடப்பது

*ஜெகதீஸ்வர உமாசுதன் குருக்கள்.*

உ
சிவமயம்

## சிவ ஸ்ரீ இராகவன் சிவாச்சாரியார் ஆலய குருவின் ஆசியுரை



“கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா” என ஔவைப்பிராட்டியார் கூறிச்சென்றார். அதற்கிணங்க நமது ஈழத்தமிழ் மக்களும் தாம் சென்ற இடங்களிலெல்லாம் கோவில்கள் அமைத்து நித்திய நைமித்திக பூஜைகளை நடத்தச்செய்து வழிபாடு செய்துவருகின்றனர். ஆலயம் சார்ந்து நமது தமிழ்ப்பண்பாடு கலாசாரமும் வளர்ந்து வருகிறது.
அந்த வகையில் கனடாவிலே ஒட்டாவா நகரிலே சிவன்கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு தையல்நாயகி உடனுறை வைத்தியநாதசுவாமி எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றார். இந்த ஆலயம் மிகப்பெரிய கருங்கல் திருக்கோவிலாகக் கட்டப்படவேண்டுமென்று பரிபாலன சபையினரும் அடியார்களும் விரும்பியிருக்கின்றனர்.

அதற்கு முன்னதாக இப்போது சிறிய அளவில் ஆலயத்தை திருத்திப் பொலிவுறச்செய்து கடந்த சுபகிருது வருடம் பங்குனி மாதம் 24ஆம் திகதி (06.04.2022) புதன்கிழமை பூர்வ ஷஷ்டித்திதியில் அமையும் இடபலக்ன சுபமூகூர்த்த வேளையில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது.

.
மிகச்சிறப்பாக நடைபெற்ற இக்கும்பாபிஷேகத்தால் ஆலயம் அருட்பொலிவோடு விளங்குகிறது. அடியார்கள் மகிழ்வுடன் இருக்கிறார்கள். இன்னுமின்னும் இறைவனின் திருவருட்கருணையால் ஒட்டாவா நகர மக்களும் மற்றும் எல்லா உலக மக்களும் இனிதே நல்வாழ்வு வாழவேண்டுமெனவும் சைவமும் தமிழும் தழைத்தோங்கவேண்டுமென்றும் பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*சிவஸ்ரீ இராகவக் குருக்கள்*
*சிவன் தேவஸ்தானம்,*
*ஒட்டாவா.*

PRIME MINISTER · PREMIER MINISTRE

July 7–17, 2023



Dear Friends:

I am pleased to extend my warmest greetings to everyone taking part in the 15th Annual High Festival, hosted by the Ottawa Sivan Temple.

Since it opened its doors in April 2007, the Ottawa Sivan Temple has served as a spiritual, social and cultural gathering place for the city's vibrant Tamil Hindu community. This event offers members of the congregation a wonderful opportunity to reaffirm their spirituality while sharing their rich heritage with the community. I am certain that the many performances and activities taking place will be enjoyed by everyone in attendance.

I would like to thank the Ottawa Sivan Temple for its commitment to promoting cultural exchange and to fostering fellowship in the community. Canada is truly a multicultural nation, made stronger and more resilient by our diversity.

Please accept my best wishes for an enjoyable and memorable festival.

Sincerely,

The Rt. Hon. Justin P. J. Trudeau, P.C., M.P.
Prime Minister of Canada

LEADER OF THE OPPOSITION | CHEF DE L'OPPOSITION



July 7, 2023

Ottawa Sivan Temple
2104 Roger Stevens Dr.
North Gower, ON K0A 2T0

Dear friends,

On behalf of the Conservative Party of Canada, it is a great pleasure to offer my warm greetings to everyone attending the Annual Festival of your Temple.

Events like this put the best of Canada on full display. They demonstrate the blessings our country receives when people are free to celebrate their culture and heritage in all its beauty.

For generations, Tamil Canadians have shared the incredible wealth of their culture and traditions with others, making our country a brighter and more vibrant place to live. Today, this spirit of hope and optimism is needed now more than ever. Across our country, Canadians are struggling with rising costs. Young people are giving up on ever owning a home, and crime is on the rise in our cities.

In times like this, people need the healing and fellowship found in their communities. My sincere thanks to the Ottawa Sivan Temple and everyone who helped organize this event. You have done so much to uplift our community. Your efforts to bring people together in positive and constructive ways have made it possible to restore hope to our country in these hard times.

All the best to everyone as you enjoy the blessings of your culture. I hope that as you honour your heritage and enjoy some summer fun, you are refreshed and encouraged by the strength of your community.

Let's bring it home!

Sincerely,



The Hon. Pierre Poilievre, P.C., M.P.
Leader of His Majesty's Loyal Opposition and Leader of the Conservative Party of Canada

HOUSE OF COMMONS, OTTAWA, ONTARIO K1A 0A6
CHAMBRE DES COMMUNES, OTTAWA (ONTARIO) K1A 0A6

Ontario

Premier of Ontario - Premier ministre de l'Ontario

July 7 – 17, 2023

**A MESSAGE FROM PREMIER DOUG FORD**

Warm greetings to all the members of the Ottawa Sivan Temple as you celebrate your Annual Festival.

Ontario is a province rich in cultural and religious diversity. We are proud to be home to a vibrant Tamil Hindu community that has contributed so much to the success of this great province. This event is a wonderful time to bring the community together, to celebrate your faith and to renew bonds with loved ones and the rest of the community.

Thank you to the good folks at the Ottawa Sivan Temple, and those who put together Vaitheeswaram 2023, for your commitment to the spiritual and social wellbeing of the Tamil Hindu community.

Have a blessed and joyous celebration.



**Doug Ford**
**Premier**



**Mark Sutcliffe**
Mayor | Maire

**Office of the Mayor**
**City of Ottawa**
110 Laurier Avenue West
Ottawa, Ontario K1P 1J1
Tel.: 613-580-2496
Fax: 613-580-2509
Email: Mark.Sutcliffe@ottawa.ca

**Bureau du maire**
**Ville d'Ottawa**
110, avenue Laurier Ouest
Ottawa (Ontario) K1P 1J1
Tél. : 613-580-2496
Téléc. : 613-580-2509
Courriel : Mark.Sutcliffe@ottawa.ca

July 2023

*Vallavambiga Sri Taiyainayaki Sametha Vaithiyanatha Swaamy Koil*
Ottawa Sivan Temple
2104 Roger Stevens Drive
North Gower, Ontario

Dear Ottawa Sivan Temple Members,

On behalf of Members of Ottawa City Council, it is my distinct pleasure to extend a very warm welcome to the Board of Trustees and congregants of the Ottawa Sivan Temple, along with the Saivite, Hindu and Tamil community members celebrating eleven days of festivals from July 7th to 17th 2023.

As Head of Council, I am also delighted to have the opportunity to offer sincerest greetings to the readers of the biennial magazine *Vaitheeswaram 2023* during this important community celebration for the Saivite, Hindu and Tamil population in the Ottawa region.

In addition, I want to take this opportunity to acknowledge Ottawans of Tamil, Hindu and Saivite heritage for their important contributions to the economic development and prosperity of our nation's capital, as well as to the dynamic social and cultural fabric of our community.

My congratulations to the editors and contributors of this biennial magazine, which highlights major events and community news for its readers.

Allow me to convey my best wishes to the readers and Ottawa Sivan Temple Members for a most successful and memorable celebration.

Sincerely,

Mark Sutcliffe
Mayor
City of Ottawa




# Chandra Arya

Member of Parliament / Député - Nepean

**Working hard for you**
**Je travaille sans relâche pour vous**

Parliament / Parlement
151 rue Sparks St., Suite/pièce 800
Ottawa, ON K1A 0A5

@AryaCanada
@AryaCanada
/ChandraAryaCanada

www.ChandraArya.ca


May 24, 2023

Niranjan Chelliah
Secretary, Ottawa Sivan Temple

I am delighted to extend my warmest greetings to all devotees of the Ottawa Sivan Temple at the annual festival. I am honored to represent such a vibrant and diverse community, and grateful for the opportunity to celebrate this special occasion with you.

The Sivan temple is a place of great significance for many members of the community and is a source of spiritual strength. It is also a place where to celebrate religious and cultural heritage and pass on the traditions to future generations.

I want to take this opportunity to acknowledge the hard work and dedication of all those who have contributed to making this festival such a special occasion. From the volunteers who have worked tirelessly, to the spiritual leaders who guide our faith, each and every one of you plays an important role in shaping the fabric of the Hindu-Canadian community.

Once again, I extend my best wishes to all those taking part in this auspicious occasion. May this festival bring joy, peace, and prosperity to all devotees and to the members of the Hindu-Canadian community.

Sincerely,

Chandra Arya

Chandra Arya
Member of Parliament / Député – Nepean

DAVID BROWN
COUNCILLOR
RIDEAU-JOCK

Ottawa

Councillor David Brown, Rideau-Jock
City of Ottawa
110 Laurier Ave W,
Ottawa ON K1P 1J1

May 2023

*As a City Councillor representing the vibrant and diverse community of Ward 21, I am writing to express my support for the upcoming temple festival organized by Ottawa Sivan Temple. The temple serves as a place of worship for the Hindu community in our Ward and it gives me immense pleasure to extend my warmest regards and offer my full support to this celebration.*

*The temple festival holds great significance not only for the members of our community, but also for our entire city. It serves as a testament to the rich cultural heritage and religious traditions that make our community so vibrant and inclusive.*

*Once again, please accept my warmest wishes and gratitude for your invaluable contributions in organizing this festival which takes place from July 7th – 17th!*

*Sincerely,*

*David Brown*
*Councillor, Rideau-Jock*

# ஒட்டாவா சிவன்கோயில் தலைவரின் செய்தி



நூறும் அறுவதும் ஆறும் வலம்வர
நூறும் அறுவதும் ஆறும் இடம்வர
நூறும் அறுவதும் ஆறும் எதிரிட
நூறும் அறுவதும் ஆறும் புகுவரே

திருமந்திரம் மூன்றாம் தந்திரம் –
— காரிய சித்தி – 6 –

வல்லவாம்பிகா ஸ்ரீ தையல் நாயகி சமேத வைத்திய நாத சுவாமிகளுடன் இணைந்த நாளாம் யூலை 11, 2007ம் ஆண்டு முதல் இற்றை 2023வரை, தோள் தந்து வணங்கிவரும் அனைத்து பக்த கோடிகளுக்கும் சிரம் தாழ்த்தி வணங்கி சிவன் அருள் பாலிக்க வேண்டிக் கொண்டு இந்த ஆசிச் செய்தியை வளங்குவதில் பெருமை கொள்கிறேன்.

தலைமீதிலே கோடி துன்பங்கள் வந்து உட்கார்ந்த போதும் அவன் பாதத்தில் சிரம் தாழ்த்தி அனைத்து துன்பங்களையும் அவன் பாதத்தில் வீழ்த்தி பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கும் பக்த கோடிகளே, உங்கள் முன் உங்களோடு அவன் பாதத்தில் சிரம் தாழ்த்தி வணங்குவதில் நல்லருள் பெறுகிறேன்.

அடுத்த பெரும்பணியாம் புதுக்கோயில் திருப்பணியும் எம்மீது சுமத்தப்பட்டுள்ளதை பெருமையோடு ஏற்று செயற்பட முண்வந்துள்ள உங்களோடு நானும் இணைந்து பொறுப்பை அவன் காலடியில் போட்டு செயற்படுவதில் சந்தோஷம் கொள்கிறேன். விரைவில் புதுக்கோயில் நிர்மாணத்தை நிதர்சனமாக்க முன்வந்துள்ள பக்தகோடிகளே பணி பெரிதானாலும் துணிவின்முன் இது சிறிய செயலாக அமைய அவன் பாதத்தை பற்றி செயற்படுவோம்.

எங்கள் சைவ பக்த கோடிகள் உலகெலாம் ஓடிப் பரந்தாலும் கனடாவின் தலைநகரிலே ஒரு சைவ ஆகமங்களுடன் கூடிய சிவனாலயம் அமைய உழைத்த உங்கள் அனைவருக்கும் சிவனருள் கிட்ட வேண்டி வணங்குவதில் பெருமை கொள்கிறேன்.

பல கோடிகள் எடுத்துக் கொடுத்து உழைத்த உங்களுக்கும் உடனிருந்த அறங்காவலர்கள், இயக்குனர்கள், வாணிபர்கள், மற்றும் நல்லுள்ளங் கொண்டு உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதில் பெருமையும், புளகாங்கிதமும் அடைகிறேன்.

விரைவில் இப்புதிய கோயில் சைவ ஆகம விதிகளுடன் கூடிய சிற்பங்களோடு விஸ்வரூபமாக எங்கள் முன் காட்சியளிக்க இறையருள் பாலிக்கட்டும் என்று வேண்டி என் இவ்வுரையை இத்துடன் முடிக்கின்றேன்.

நன்றிகள், வாழ்க வளமுடன்

*தலைவர்*
*திரு முத்துலிங்கம் தம்பிராஜா*

## OTTAWA SIVAN TEMPLE PRESSIDENT'S MESSAGE

Noorum arupathum aarum valamvara
Noorum arupathum aarum idamvara
Noorum arupathum aarum ethirida
Noorum arupathum aarum puguvare

- Thirumanthiram
- Moondraam thanthiram

I am delighted to extend my warmest greetings to all devotees who have supported Vallavahampiga Sri Thayalnayagi Sametha Vaithiyanatha Swamy koyil since July 11, 2007.

Despite life's obstacles, you have put your faith in Him. It is my distinct pleasure to stand with you.

We are now undertaking the essential task of building a new temple. I am gratified that many of you have come forward to shoulder this paramount endeavour. Let us put our faith in Him and embark on this sacred journey.

I am honoured to express my heartfelt appreciation to our dedicated Trustees, directors, donors, vendors and volunteers without whom we would not have achieved all that we have.

With His will and grace, we will successfully complete our new temple in the near future.

As my parting words, I ask for His grace and blessings for us all.

*Sincerely,*

*Muttulingam Thambirajah*

*President*

## தையல்நாயகி அம்பிகா சமேத வைத்தியநாதசுவாமி கோவில் என அழைக்கப்படும்
## கனடா - ஒட்டாவா சிவன் கோவில்
## புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 2022
## வர்ணனையும் தத்துவ விளக்கமும்

அறிவித்தால் அறியும் இயல்புடையதும் சார்ந்ததன் வண்ணமாக இயங்கும் தன்மையுடையதுமான எண்ணற்ற ஆன்மாக்கள் இயல்பாகவே ஆணவம் முதலிய மலங்களினால் மறைக்கப்பட்டு இருக்கும் பரிதாப நிலைகண்டு இரங்கிய ஒரே பரம்பொருட் பதியாகிய இறைவன் மாயையை முதற்பொருளாக்கி தனு (உடல்), கரண (உடலின் கருவிகள்), புவன (உலகம்), போகங்களை (அனுபவம்) படைக்கின்றார். அவற்றில் ஒன்றிய ஆன்மாக்கள் பிறந்து வினைசெய்து குருவருளாலும் திருவருளாலும் ஞானம் பெற்று இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் உயர் நிலைபெற்று இறைபதம் அடைகின்றன.

பாவ புண்ணியங்களைத் தரும் தீவினை நல்வினைகளின் இயல்பறிந்து வெறுவினை என்னும் பற்றற்ற வினைகளை மட்டும் செய்து சமநிலை நோக்கத்துடன் வாழ்வதுதான் இருவினை ஒப்பு. இந்நிலையால் வருவது ஆணவம் முதலிய மலங்களின் ஒடுக்கமாகிய மலபரிபாகம். இந்நிலையில் ஆன்மாவை முழுமையாகத் திருவருள் ஆட்கொள்வதே சத்திநிபாதம்.

தோன்றிய உயிரினங்களில் முதன்மையான மனிதப் பிறவியை அடைந்த நாம் இப் பிறவித் துயர் போக்கி இறைவனுடன் இணைந்து முத்தியின்பம் என்னும் முடிவைப் பெறுவதை நோக்கமாக உடையோம். அதற்காகவே இறைவன் நமக்காக வேத சிவாகமங்களைத் தந்திருக்கிறான். அவை நாம் வாழும் வகையையும் இறைவனை வணங்கும் வகையையும் காட்டுகின்றன. இந்த ஒரே பரம்பொருள் அலகில் சோதியனாக- அருவுருவாகிய சிவலிங்கமாக - பிறவா யாக்கைப் பெரியோனாக - எண்குணத்தனாக - அட்டமூர்த்தியாக - அம்பலத்தாடும் ஆடல்வல்லானாக - சிவசக்தியாக - சிவபெருமானாக விளங்கும் வகையினையும் அவை தெளிவுபடுத்திநிற்கின்றன.

ஒருநாமம் ஒருருவம் இல்லாத பரம்பொருளுக்கு நம்மனோர் இலகுவில் மனம் கொள்வதற்காக பல்வேறு பெயர்களையும் பல்வேறு வடிவங்களையும் இந்நூல்கள் காட்டுகின்றன. அத்தகைய திருவுருவங்களை உருவாக்கும் முறைமைகளையும், அவற்றை வைத்து வழிபடவும் வளம்பெறவும் ஆலயங்கள் அமைக்கவேண்டிய முறைமைபற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. இறைவன் கூற்றான அவ்வாகமங்களின் வழிநூல்களாக சிற்பநூல்களை முனிபுங்கவர்கள் விரித்துரைத்தனர். அங்கு நிகழ்த்தவேண்டிய கிரியைகள் பற்றி பத்ததிநூல்கள் சிவாச்சாரியர்களால் உருவாக்கப்பட்டன. வழிபடும் முறைகளையும், விரதம் முதலிய அனுட்டானங்களையும் புராண இதிஹாசங்கள் தெரிவிக்கின்றன. அறநெறி போற்றி வாழும் முறைகள் பற்றி சாஸ்திரங்கள் எழுந்தன.

இவற்றினடிப்படையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வாழும் நெறிமுறைகள் நான்கை முன்னோர்கள் வகுத்துரைத்தனர். நால்வர் முதலிய நாயன்மார்கள் வாழ்ந்து காட்டினர். வேத சிவாகமப் பொருள்களைத் திருமுறைகளாகப் பாடிச் சென்றனர். தத்துவக் கருவூலமான அவை பக்திப் பனுவல்களாயமைந்து பரமனை நம்மிடம் அழைத்துவரத் துணையாக அமைகின்றன.

இவற்றினடிப்படையில் அரசர்கள் கோவில்களைக் கட்டினர். அந்தணர்கள் கிரியைகளைச் செய்கின்றனர். அடியவர்கள் அரனடி போற்றி அறநெறியில் வாழ்ந்து அன்புமதம் பேணி சைவர்களாக - சிவநேயச் செல்வர்களாக வாழ்கின்றனர். ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' எனவும், ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்றும் அருளாளர்களின் கூற்றிற்கு இணங்க சைவத்திருக் கோவில்கள் இன்னுமின்னும் உலகெங்கும் கட்டப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், கனடா தேசத்தின் தலைநகரான ஒட்டாவா நகரிலும் ஒரு சிறந்த சிவன்கோவிலை ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழ்கின்ற சைவத்தமிழ் அன்பர்கள் கட்டினார்கள். தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவிலைப் பின்பற்றி அதே நடைமுறைகளை அதிகம் கைக்கொள்வதாகவும் தையல்நாயகி அம்பிகா சமேத வைத்தியநாதர் என்ற சுவாமி பெயருடன் இவ்வாலயம் அமைந்துள்ளது. சிவாகம மரபிலமைந்த கிரியைகளுடனும், சைவசித்தாந்த நெறிமுறையிலமைந்த வாழ்க்கைமுறை பேணுபவர்களாகவும் இவ்வாலய நிர்வாகத்தினரும் அடியவர்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக ஈழத்துச் சிவாலயங்களின் கிரியா மரபுகளை முறைதவறாது பின்பற்றி வருகின்றனர்.

ஆகம மரபின்படி உரிய காலத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு பிலவ வருடம் பங்குனி மாதம் 19ஆம் திகதி (01.04.2022) வெள்ளிக்கிழமை அதிகாலை அமிர்த யோகத்தில் கிரியைகள் ஆரம்பமாகி பங்குனி மாதம் 24ஆம் திகதி (06.04.2022) புதன்கிழமை பூர்வ ஷஷ்டித்திதியில் அமையும் இடபலக்ன சுபமூகூர்த்த வேளையில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இங்கு ஒரு முக்கிய விடயம் குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகத்திற்கு நாள்குறித்த உடனேயே திருமுறைப் பாடல்களில் இடர்களை பதிகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓதப்படலாயிற்று. அதன்பின் பொன்வேண்டல் பதிகம் முதலியனவும் அதன்பின் ஒவ்வொரு கிரியைகளுடன் தொடர்பான தேவாரங்களை அந்தந்த வேளையில் அன்பர்கள் ஓதிவந்தனர். கும்பாபிஷேக நிறைவில் கதவுதிறக்கப் பாடும் பதிகம் பாடி இறைதரிசனம் பெற்றனர். தொடர்ந்து அடியார்கள் இவ்வாலயத்தில் திருமுறைகள் ஓதுவதில் காட்டும் அக்கறை போற்றத்தக்கதாகும்.

கனடா கந்தசுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கிருஷ்ண. பங்குசக் குருக்களின் சர்வ சாதகத்துடனும், கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்களின் ஆகம ஆலோசனைகளுடனும் நடைபெற்ற இந்தக் கும்பாபிஷேகத்தை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஜெகதீஸ்வர. உமாசுதக் குருக்களும் இவ்வாலய குருத்துவ சேவையை நீண்டகாலம் நடத்துபவரும், மொன்றியல் திருமுருகன் ஆலய குருவுமாகிய சிவஸ்ரீ தியாகராஜ. பூர்ணானந்த சிவாச்சாரியாரும் இணைந்து நடத்தியிருந்தனர். சிவஸ்ரீ சின்னஸ்வாமி பத்மநாபக் குருக்கள், சிவஸ்ரீ சாமிரட்ன ஹரிகேச சர்மா, சிவஸ்ரீ பத்ம. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், சிவஸ்ரீ சிவகுமார ஜனார்த்தனக் குருக்கள், சிவஸ்ரீ வைத்தியநாத சர்வேஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ பூ. திவ்யன் சர்மா, பிரம்மஸ்ரீ பூ. தீப்தன் சர்மா ஆகியோர் கிரியைகளைச் செவ்வனே நிகழ்த்தினர்.

நாதஸ்வர இன்னிசை வேந்தன் கலாநிதி பஞ்சாபகேசன் நாகேந்திரன் மற்றும் தவில் சுடரொளி ஜெயராமன் சூரியகுமார் இணைந்து மங்கல வாத்தியம் இசைத்தனர்.
ஏப்ரல் முதலாம் திகதி அதிகாலை விநாயகர் வழிபாட்டுடன் கர்மாரம்பம் நடைபெற்றது. புண்ணியாகவாசனம், பஞ்சகவ்ய பூஜை என்ற இரு ஆரம்பக் கிரியைகள் மூலம் வருணதேவரும் பஞ்சப்பிரம்ம மூர்த்திகளோடு கூடிய சதாசிவரும் ஆராதனை செய்யப்பட்டு மந்திர நீர் தெளித்தும் ஆனைந்து பருகியும் ஆலயமும் அடியார்களும் புனிதமடைந்து உள்ளமும் உடலும் சூழலும் தூய்மைபெற்று கும்பாபிஷேகத்திற்கான தயார்நிலை உருவாக்கப்பட்டது. அடுத்து, ஆசார்ய வரணம் என்ற கிரியை மூலம் கும்பாபிஷேக சிவாச்சாரியர்களை ஆலய பரிபாலகர்கள் வரித்துக்கொள்ளும் நிகழ்வு நடைபெற்றது. இதன்பின் பிரதம சிவாச்சாரியர் அங்கு வந்திருந்த அந்தணப் பெரியார்களையும் விநாயகர், மூலமூர்த்தி ஆகியோரையும் வணங்கி இந்தக் கும்பாபிஷேகத்தைத் தாம் செய்வதற்கு அனுமதி தந்து ஆதரவு வழங்குமாறு வேண்டிக்கொள்ளும் நிகழ்வாகிய அனுஜ்ஞை (அனுமதி பெறல்) இடம்பெற்றது.

கும்பாபிஷேகத்திற்காக சேகரிக்கப்பட்ட திரவியங்கள் (பொருட்கள்) யாவும் தூய்மையாக்கப்பட்டு, சிவாஸ்திர மந்திரத்தால் பூஜிக்கப்பட்டு புனிதமானதாகவும் சிவத்திரவியமாகவும் ஆக்கப்பட்டது. அவை ஆகமம் கூறிய முறையில் பதினொரு பாகமாகப் பிரிக்கப்பட்டு எந்தெந்தக் கிரியைகளுக்கு எத்தனை எத்தனை பாகங்கள் பயன்படுத்தவேண்டும் என்ற பகுப்புமுறை தெளிவுபடுத்தப்பட்டது. இது திரவிய சுத்தி, திரவிய விபாகம் என்ற கிரியைகளாய் அமைந்தன.

நமது வழிபாடுகளில் முதலிடம் கணபதிக்கே. குட்டிக் கும்பிட்டே எதுவும் ஆரம்பமாகிறது. இதன்பின் கிரியைகளின் தொடக்கத்தில் விரிவான முறையில் கணபதியை கும்பத்திலும் அக்கினியிலும் பூஜித்து ஹோமம், அபிஷேகம் செய்து அவரை மகிழ்வித்து எடுக்கும் காரியங்கள் இடையூறில்லாமல் நிறைவேறவேண்டும் என வேண்டும் வகையில் கணபதி ஹோமம் என்ற கிரியையும், செல்வத்தின் அதிபதியான இலக்குமியை மகிழ்வித்து ல்'மி ஹோமம் என்ற கிரியையும், நவக்கிரக நாயகர்களை மகிழ்வித்து நவக்கிரக ஹோமம் என்ற கிரியையும் நடைபெற்றன. இறைவனின் கட்டளைப்படி இப்பிரபஞ்ச நிகழ்வுகளைத் தமது சஞ்சாரங்கள் மூலமாக நெறிப்படுத்தி நிற்பவர்கள் நவக்கிரகங்களே. அவர்களின் நிலையை அடிப்படையாக வைத்து நல்ல நேரமாகிய முகூர்த்தக் கணிப்புகள் செய்தே நற்காரியங்களை நாம் செய்கிறோம். அதனால் கிரகங்களை மகிழ்வித்து, காலப்பிழைகள் ஏற்பட்டுவிடாமலும் தோஷங்கள் இல்லாமலும் கும்பாபிஷேகம் நிறைவுபெறவேண்டுமென்று பிரார்த்தித்து இந்த நவக்கிரக ஹோம நிகழ்வு நடைபெறுகிறது.

நிலம் சம்பந்தமான தோஷங்கள் போக்கி, பூமியைப் புதிதாக ஆக்கிப் புனிதப்படுத்தும் கிரியையான வாஸ்துசாந்தி என்ற கிரியை அதன்பின் இடம்பெற்றது. அத்தோடு காலைநேரக் கிரியைகள் நிறைவுபெற்றன. மாலை மீண்டும் விநாயக வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமானபோது முதலில் கிராமசாந்தி நடைபெற்றது. கிராமத்தின் காவலனாக உள்ள வைரவப்பெருமானை சிறப்பாக ஆராதித்து கும்பாபிஷேக நிகழ்வின்போது கிராமத்தை நன்கு காத்தருளுமாறு வேண்டுதல் இக்கிரியையின் நோக்கமாகும். இதன்பின் பிரவேசபலி இடம்பெற்றது.

பாலாலயத்தில் இறைவன் குடிகொண்டிருக்கும் காலத்தில் சுவாமி வீதி வலம் வருதல் கிடையாது. சிறப்பான வழிபாடுகள் இல்லாத காரணத்தால் வீதிகளில் துர்த்தேவதைகள் குடியேறியிருக்கலாம். பூதர், பிசாசர், ராட்சசர், பிரம்மராட்சசர் முதலிய அத்தகையோரை அகற்றி திசைக் காவலர்களாகிய இந்திரன், அக்னி, யமன் முதலியோரை அந்தந்தத் திசைகளில் காவலின்பொருட்டு ஆவாகனம் செய்து நியமிக்கும் கிரியையே பிரவேச பலியாகும். இதேபோல இனியும் இத்தகைய தீய சக்திகள் அருகே நெருங்கவிடாமல் தடுப்பதற்காக ஆயுதப்படைகளை நான்கு திக்குகளிலும் நிறுவுதலே திசாஹோமம் என்ற கிரியையாகும். ரக்ஷோக்ன தேவரை மகிழ்வித்து அனைத்துத் தீமைகளையும் அழித்தல் ரக்ஷோக்ன ஹோமமாகும். இம்மூன்று கிரியைகள் மூலம் பகைமை, தீமை, தடைகள் என்பன அகற்றப்படுதல், அவை இனி வாராமல் காத்தல் ஆகிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டன.

இங்கு இக்கிரியைகள் குறிப்பாக நமது மனம் சார்ந்து ஒரு தொனிப்பொருளையும் தருகின்றன. நமது அகப்பகைகள் என்பது ஆசை கோபம், ஆணவம் முதலியனவே. தீய சக்திகள் என்பது தீய அல்லது எதிர்மறையான எண்ணங்களே. இவை யாவும் அகற்றப்பட்டு இறைசிந்தனையை மனத்தில் பதிப்பதன்மூலம் நமது வாழ்க்கை காவலிடப்படுகிறது என்பதே இதன் தத்துவார்த்த உட்பொருளாகும்.
சின்னஞ்சிறு பாலாலயத்தில் தம்மை ஒடுக்கிக்கொண்டிருந்த இறைவனது அருட்சக்தியை அதிகரிக்கச்செய்வதற்காக மூர்த்திகரத்தை அதிகரிக்கச்செய்யும் மூன்று கிரியைகள் அடுத்து இடம்பெற்றன. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற அட்டமூர்த்திகளாக இறைவன் விளங்குகிறான் என்கிறது ஆகமம். இயற்கைச் சக்திகளினூடாக இறைசக்தியைக் கண்டறியும் செயலாக அட்டமூர்த்திகளை வழிபடுகின்ற மூர்த்தி ஹோமம் என்பதும், சம்ஹிதா மந்திர தேவர்களை வழிபட்டு மந்திரசக்தியை அதிகரிக்கின்ற சம்ஹிதா ஹோமமும், சாந்தி நிகழும் வகையில் பிரார்த்திக்கின்ற சாந்தி ஹோமமும் இம் மூன்று கிரியைகளாய் அமைந்தன.

தீயன அகற்றல், புனிதப்படுத்துதல், காவலிடுதல், சக்தியை அதிகரித்தல் என்னும் நோக்கங்களுடனான ஆயத்த நிகழ்வுகளாக இந்த ஆரம்பக்கிரியைகள் நிறைவுபெற, மிருத்சங்கிரஹண மென்னும் மண்ணெடுத்தல் கிரியையுடன் கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரியைகள் ஆரம்பமாகின்றன.

பூமாதேவியை வழிபட்டு அனுமதி பெற்று வேத மந்தி கோஷங்களுடன் மண் தோண்டி எடுக்கப்பட்டு சந்திரனைக் கும்பத்தில் ஆவாஹனம் செய்து சுற்றிவர பன்னிரு ஆதித்தியர்களை (சூரியர்கள்) பூஜித்து முளைப்பாலிகை இடப்பட்டது. தொடர்ந்து சிவாசாரியர்கள் காப்புக்கட்டுதல் (ரட்சாபந்தனம்) நடைபெற்றது.

இதன்பின் எல்லா சிவாசாரியர்களும் தத்தமது குருமாரை நினைத்து வணங்கித் தாம் சிவமேயாம் தன்மை பெற்று இறைதிருவுருவமாக விளங்கக்கூடிய கும்பங்களை வேதமந்திரங்களுடன் அலங்கரிக்கும் நிகழ்வாகிய கும்பாலங்காரம் (கடஸ்தாபனம் - கும்பத்தை உருவாக்குதல்) என்ற கிரியையைச் செய்தனர். அந்தக் கும்பங்கள் பாலாலயத்தில் இருக்கும் இறைதிருவுருவங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டு அந்தந்த தெய்வ சக்தி அந்தந்தக் கும்பங்களில் சேர்ப்பிக்கின்ற கலாகர்ஷணம் என்ற கிரியை இடம்பெற்றது.

சைவசித்தாந்தம் இந்த உலகப்படைப்பு மனித வாழ்வு, இறைவன் திருவருள் அனைத்தையும் தத்துவ ரூபமாகவும் கலைகளின் வடிவமாகவும்தான் விளக்குகின்றது. அந்த வகையில் பஞ்சகலைகள், பிருதுவி முதல் குடிலை ஈறாக 36 தத்துவங்கள், மந்திரம் - பதம் - புவனம் - கலை - தத்துவம் - வர்ணம் எனும் ஆறு அத்துவாக்கள் (அத்வா - வழி) என்பன தான் சிருஷ்டி - லயம் ஆகியவற்றின் அடிப்படைகள். இவை அத்தனையும் கலாகர்ஷணம் - நியாசம் என்னும் கிரியைகளில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இறைசக்தி சேர்க்கப்பட்ட கும்பங்கள் யாவும் அந்தந்த யாகம் அல்லது ஸ்நபன மேடைகளில் சேர்ப்பிக்கப்பட்டபின் பாலாலயத்திலிருந்த மூர்த்திகள் யாவும் மீண்டும் மூலாலயத்தில் அஷ்டபந்தன மருந்து மூலம் ஸ்தாபனம் செய்யப்பட்டன. யாகங்களிலும் ஸ்நபனங்களிலும் பஞ்சாசன - பஞ்சாவரண பூஜைகள் விரிவாக நிகழ்த்தப்பட்டு ராஜோபசாரம், தேவோபசாரம் வழங்கப்பட்டு ஹோமங்களும் நடைபெற்றன. “உரு ஏறத் திரு ஏறும்”

என்பதற்கிணங்க காயத்ரி மந்திர ஹோமம், மாலாமந்திர ஹோமம், மூலமந்திர ஹோமம், த்ரிசதீ மந்திர ஹோமம், ஸ்ரீ ருத்ர ஹோமம் முதலியன மூலம் தெய்வ சாந்நித்தியம் அதிகரிக்கும் வகையில் தொடர்ந்து நான்கு நாட்கள் - ஏழு காலங்கள் - பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஆகமங்களில் சொல்லப்பட்ட பல்வேறு திரவியங்கள் அதற்குரிய வேத மந்திர கோஷங்களுடன் விசேட திரவிய ஹோமமும் செய்யப்பட்டது.

விக்கிரகங்களை ஸ்தாபிப்பதன் முன்னதாக யந்திரங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. அதற்கு முன்னதாக ஸ்தூபியில் கலசங்கள் பொருத்தி ஆலயம் முழுமை செய்யப்பட்டது. பிரபஞ்ச சக்தியை வானிலிருந்து காற்றலைகளினூடாக ஈர்த்துக் கருவறைக்கு அனுப்பி, அங்குள்ள திருவுருவங்களில் பதியச்செய்பவை இக் கலசங்களே. தெய்வ சாந்நித்தியம் உருவாகும் வேளையில் ஒளிமயமான விளக்குகள் திருவருட் சக்தியின் அடையாளமாகவும் தீப லட்சுமியாகவும் விளங்கும் வகையில் அடியார்கள் அனைவரும் இணைந்து திருவிளக்குப் பூஜை செய்து தீபஸ்தாபனம் நிகழ்த்தியமையும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

அஷ்டபந்தன மருந்தின் வெம்மையைத் தணித்து எம்பெருமானைக் குளிர்விக்கும் வகையில் எண்ணெய்க்காப்பு வைபவமும் சிறப்பாக நடைபெற்றது. இதன்பின் திருவுருவங்கள் யாவும் சுத்தி செய்யப்பெற்று மந்திர சக்திகளைப் பதிக்கின்ற பூர்வசந்தானம் எனும் நியாசங்களும் அக்னி - கும்பம் - மூலவர் மூன்றும் நாடி சந்தானம் நூலால் தொடுக்கப்பட்டு அதனூடாக இறைசக்தி திருவுருவத்தில் சேர்க்கப்பட்டு பொலிவுபெற்றது.

கும்பாபிஷேக தினத்தில் விசேட உபசார ஹோமங்களின்பின் மஹாபூர்ணாகுதி இடம்பெற்று சகல குண்டங்களிலுமிருந்து கும்பங்களில் அருட்சக்தி சேர்க்கப்பட்டு தீபாராதனை பூஜைகளும் ஷோடச உபசாரங்களும், வேத, தோத்திர, கீத, நிருத்த, வாத்ய, தேவார உபசாரங்களும் வழங்கி எம்பிரான் திருவுளம் குளிரச் செய்தபின் கும்பம் வீதி வலம் வந்து முதலில் ஸ்தூபிகளுக்கும் பின்னர் கற்பக விநாயகர், வைத்தியநாதசுவாமி, தையல்நாயகி, செல்வமுத்துக்குமரன் மற்றும் பரிவார தெய்வங்கள் யாவருக்கும் மஹாகும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது.

மஹாபிஷேகம், விசேட பூஜைகள், திருக்கல்யாணம், திருவூஞ்சல், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் என கும்பாபிஷேகத்தின் அனைத்துக் கிரியைகளும் நிறைவாகச் செய்து மகேஸ்வரனும், மாகேஸ்வரர்களும் (அடியார்கள்) மனநிறைவோடு இனிதே வாழ்கின்றார்கள்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

**வர்ணனைத் தொகுப்பு:**

**சிவஸ்ரீ கிருஷ்ண. பங்குசக் குருக்கள், பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா**

# கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகம் என்பது கும்பத்தினால் அபிஷேகம் செய்தல் என்ற கருத்தை உடைய ஒரு வடமொழிச் சொல். கும்பம் என்பது இறைசொரூபமாக பாவனை செய்யப்படும் நிறைகுட வடிவம். சர்வ தேவதா ஸ்வரூபம் என ஆகமங்கள் கும்பத்தினை விவரிக்கும். அதாவது எந்த ஒரு தெய்வத்தையும் நாம் கும்பத்தில் ஆவாஹனம் செய்து வழிபடலாம். அவ்வாறு கும்பத்தில் எழுந்தருளச்செய்து வழிபட்ட இறைவனை, ஆலயத்தின் கருவறையில் அமைக்கப்பட்டிருக்கும் அவனது திருவுருவத்திற்கு அபிஷேகம் செய்வதன்மூலம் அங்கு அவனை நிலையாகக் குடியிருக்கச்செய்து தினமும் இறைவழிபாட்டை நாம் நடத்துகிறோம். இதுவே கும்பாபிஷேகம் என்பதன் விளக்கமாகும்.

ப்ரதிஷ்டை என்ற ஒரு சொல்லும் கும்பாபிஷேகத்தை உணர்த்துவதாகும். 'திஷ்ட்' என்ற வினையடி நிற்றல் என்ற பொருளையுடையது. 'ப்ர' என்ற உபசர்க்கத்தோடு இவ்வேர்ச்சொல் இணைந்து நன்கு நிலை நிறுத்துதல் என்ற பொருளையுடைய ப்ரதிஷ்டை என்ற சொல்லைத் தருகிறது.

ஒரு நாமம், ஒருருவம் இல்லாமல் எங்கும் பரவியிருக்கின்ற எல்லாம் வல்ல அந்தப் பரம்பொருட்சக்திக்கு ஏதோ ஒரு பெயரைக் கொடுத்து அதற்கேற்ற உருவ அமைப்பையும் கற்பித்து வழிபடுகிறோம். அந்த உருவத்தில் இறைசக்தி எழுந்தருளி இருப்பதாக பாவனை செய்து அந்த உருவத்துடன் நாம் அன்புடன் உறவாடி அதற்குரிய உபசாரங்களை வழங்கி மனநிறைவடைகிறோம். நமது துன்ப துயரங்களை அந்த உருவத்தோடு பகிர்ந்துகொண்டு மன அழுத்தங்களைக் குறைத்துக் கொள்கிறோம். இறைவன் அந்த உருவத்தினூடாக அருளாகிய தமது சக்தியை எமக்கு வழங்குகிறான் என்ற எதிர்பார்ப்போடு, அந்த அருட்சக்தி காரணமாக நமது துயரங்கள் அகன்று நாம் புதிய சக்தி பெற்று இவ்வுலக வாழ்க்கையில் சகல நலங்களும் அடைந்து இன்புறலாம் என்பது எமது நம்பிக்கை. இவ்வுடல் நீத்தபின் அந்தப் பரம்பொருட் சக்தியோடு ஒன்றிணைந்து பேரானந்த நிறைவை அடையலாம். இந்த நம்பிக்கைகள் என்றும் அடியவர்களுக்கு மனச்சாந்தியை வழங்க வல்லவை.

எனவே, எங்கும் பரவியிருக்கும் அந்தப் பரம்பொருட் சக்தியை கும்பத்திலே எழுந்தருளச்செய்து பின் அதனை அபிஷேகம் செய்வதன்மூலம் திருவுருவத்திலே எழுந்தருளியிருந்து நிரந்தரமாக எமக்கு அருள்தர வேண்டுவதே கும்பாபிஷேகத்தின் நோக்கம்.

பக்தி இலக்கியங்கள் வர்ணிப்பது போலவும், நாம் நமது மனக்கண்ணிலே கற்பித்து வைத்திருப்பதுபோலவும் திருவுருவத்தை அவன் கொண்டிருக்கிறானோ இல்லையோ, அளவற்ற கருணையையும் சக்தியையும் அவன் கொண்டிருக்கிறான் என்ற கருத்தை எந்த ஒரு விஞ்ஞானியோ, அறிவியலாளனோ மறுக்க முடியாது.

"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மையான்"

என்று சைவசித்தாந்தம் (திருவருட்பயன்) அவனை அழகாக வரையறுத்துக் காட்டுகிறது. அந்த இறைவன் பெரியவற்றிற்கெல்லாம் பெரியவன். நுண்மையானவற்றுள் மிக நுண்மையானவன். அவனது அருட்பேற்றிற்கு ஒப்புவமை கூறமுடியாது என்பது இக்குறளின் கருத்து. அதாவது 'வரையறுத்துக் காட்டமுடியாதவன்' என்பதே அவனுக்கு வரைவிலக்கணம். அத்தகைய ஒரு சக்தியை அறிவியலாளர்கள் எவ்வாறு ஒப்புக்கொள்வர் என்பது சிலருக்கு ஐயமாக இருக்கலாம். மின், அல்லது இலத்திரனியல் சக்திகளை ஏற்று அவற்றின் வலிமையைப் புரிந்துகொண்டு அந்தச் சக்திகளைத் தமக்கு வேண்டிய வகையில் ஒலிச்சக்தியாகவோ, ஒளிச்சக்தியாகவோ, வெப்ப சக்தியாகவோ, காந்த சக்தியாகவோ நாளாந்தம் பயன்படுத்திக்கொண்டிருக்கும் எந்த ஒரு மனிதனும் இப்படி ஒரு 'மஹாசக்தி' நம்மை ஆண்டுகொண்டிருக்கும் ஆண்டவனாக இருப்பதை மறுக்கமுடியாது.

இயற்கையாக எங்கும் சக்தி நிறைந்திருப்பதை நாம் காணுகின்றோம். எல்லா இயற்கைச் சக்திகளுக்கும் மூலசக்தியாக, யாவற்றுக்கும் நடுநாயகமாக நின்று அனைத்தையும் இயக்குகின்ற மூலப்பொருள் சூரியன். அதன் ஒளிச்சக்தியையும் வெப்ப சக்தியையும் யார் மறுப்பார்? பூவுலகிற்கு உயிர்கொடுக்கும் சூரியனை யாவற்றுக்கும் முதற்பொருளாக ஏற்றுப் போற்றுகிறது காயத்ரி என்னும் வேதமந்திரம்.

"இப்பூவுலகம், மேலுலகம், கீழுலகம் என்ற மூவுலகங்களையும் இயக்கி, யார் நமது அறிவைத் தூண்டிநிற்கிறாரோ, அந்த ஒளிக்கடவுளுக்கு வந்தனம்"

காற்று வீசுகிறது. ஆறு பாய்கிறது. மழை பெய்கிறது. எல்லாம் இயற்கைச் சக்தியின் லீலைகள். இந்த இயற்கை யாவற்றிலும் உள்ள சக்தி மகத்துவத்தைக் கண்டு வியந்தார்கள் வேதகால ரிஷிகள். அந்த இயற்கையின் ஒழுங்கமைப்பை - நியதியை - ஒழுக்கை அவர்கள் வியந்து போற்றினர். (ரிதம் என்ற வட சொல்லையும் - Rhythm என்ற ஆங்கிலச் சொல்லையும் ஒப்பிட்டு நோக்குக) அவற்றின் அடிப்படையாக அவற்றின் உள்ளேயும் (உள்) அவற்றைக் கடந்தும் (கட) இயங்கும் ஒரு சக்தியை உணர்ந்தனர். கடவுள் என்றனர். இறைவன் என்றனர். அதனால் உணரப்பட்டன வேதமந்திரங்கள். கவிதைகளாக, பிரார்த்தனைகளாக, புகழ்மொழிகளாக, வேண்டுதல்களாக, புதிர்களாக, வினாக்களாக அவை வெளிவந்தன. அந்த வேதம் என்னும் மறைபொருட் பாடல்களைப்பயன்படுத்தி இயற்கை தந்த அக்னியிலே இயற்கை தந்த விளைபொருட்களை இட்டு யாகங்கள் செய்து மகிழ்ந்தனர். வேள்வித் தீயில் அவை எரிந்து மறைந்தபோது அங்கு மாற்றீடாக உண்டாகும் புகையும் வாசனையும் பெரும் சக்தியை வெளிப்படுத்தும் என்பதைக் கண்டறிந்தனர். வெளிப்படையாக மட்டுமன்றி கதிர்வீச்சுக்களாகவும், அலைவடிவங்களாகவும்கூட சக்தியை வெளிப்படுத்துகின்றன என உணர்ந்தனர்.

ஆகமங்கள் அறியப்பட்டன. இந்த அருட்சக்தியை நாம் அகப்படுத்தினால் என்ன என அவை ஆராய்ந்தன. "பக்தி வலையில் படுவோன் காண்" என்பதற்கிணங்க, மந்திரசக்தி, மனோசக்தி ஆகியவற்றால் அந்தப் பேரருட் சக்தியை ஒரு சிறிய திருவுருவத்தினுள் அடக்கி, ஆலயம் ஒன்றினுள் பாதுகாத்து வைத்துப் பேணவும், வேண்டியபோது நாம் அந்த அருட்சுரப்பை அனுபவிக்கவும் ஆகமங்கள் வழிசமைத்தன.

வானியலை ஆராய்ந்து சோதிடம் கண்டும் கணிதவியலை ஆராய்ந்து சிற்பம் அமைத்தும் ஒலியியலை ஆராய்ந்து மந்திரங்களைக் கண்டறிந்தும் ஆலயங்கள் அமைத்து அங்கு திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்து மந்திரங்கள் ஓதிக் கிரியைகள் செய்து வழிபாடு செய்யும் மரபு மலர்ச்சி பெறலாயிற்று. ஆலயம் அமைத்து வழிபடும் அந்த ஆகம மரபில், வேதம் ஓதி எரியோம்பும் வேதகால வைதிக மரபும் கைவிடாது பேணப்படலாயிற்று.

இயற்கைச் சக்தியின் மூலங்கள் ஐந்து எனக்கண்டறிந்து பஞ்சபூதங்கள் என அவற்றை அழைத்தனர். (B)பூ - ஆகுதல், உருவாகுதல். பூதம் - உருவாக்கம். எப்பொருளை எடுத்தாலும் பிருதுவி, அப், தேயு, வாயு, ஆகாசம் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) என்ற அந்த ஐந்து மூலப் பொருட்களாலேயே ஆக்கப்பட்டிருக்கும். அதனாலேயே அவை பஞ்ச பூதங்கள் எனப்பட்டன. பஞ்சபூதங்களின் திரட்சி என்பதனால் பிரபஞ்சம் என இந்த சூரியக் குடும்பம் அழைக்கப்படலாயிற்று.

இயற்கைச் சக்தியை வசப்படுத்த இயற்கைப் பொருட்களே தேவை என உணர்ந்த முன்னோர், பஞ்சபூதங்களின் அடிப்படையிலேயே ஆலயக் கிரியைகளை அமைத்தனர். பூத நாயகன் என இறைவனைப் போற்றினர். கிராமிய மரபில்கூட, பூதராயர் வழிபாட்டை இன்றும் காணலாம். பஞ்சபூதத் தளத்தைக் கடந்து இன்னும் கொஞ்சம் விரிந்த நிலையில் சிந்திக்கும்போது அட்ட மூர்த்திகள் கும்பாபிஷேகக் கிரியைகளிலும் சைவ சித்தாந்த தத்துவத்திலும் முக்கிய இடம் பெறுவதைக் காணலாம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களுடன் சூரியன், சந்திரன், எஜமானன் (ஆன்மா) என்னும் மூன்றையும் சேர்க்கும்போது அட்ட மூர்த்திகள் உருவாகின்றனர். இறைவன் அட்டமூர்த்திகளின் வடிவமாக இருக்கிறான் என்பதைத் சைவத் திருமுறையாளர்கள் பல இடங்களில் தொட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

மின்னலைக்கண்டு பயந்தனர் நமது முன்னோர்கள். பின்னர் அதனைத் தெய்வ சக்தியாக்கி வியந்தனர். விஞ்ஞானி அந்த மின்னலிலிருந்து மின்சாரத்தைக் கண்டுபிடித்தான். மின்சார சக்தியை உண்டாக்குவது இலகுவானதா? அதற்காக எத்தனை விதமான பொருட்கள் அதற்குரிய அளவுப் பிரமாணங்கள் தப்பாமல் உரிய முறைப்படி நியமிக்கப்பட்டு அதற்கான செயற்பாடு சரியான முறையில் நிகழ்த்தப்படும்போது மின்சாரம் தோன்றுகிறது. அதுபோல பிரபஞ்சத்தின் அடிப்படை மூலகாரணமாக அண்டவெளியெங்கும் பரந்தும் நிறைந்தும் கரந்தும் இருக்கின்ற பேரருட் சக்தியைச் சுரக்கச்செய்து அதனை நமக்கு வேண்டிய வடிவத்தில் நமக்குரிய இடத்தில் பெறுவதற்கு ஏகப்பட்ட செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. அவைதான் கும்பாபிஷேகக் கிரியைகள்.

மின்சாரத்தைக் கையிலே கொண்டுவர முடியாது. கம்பிகள் வேண்டும். கம்பிக்குக் காவலிடப்பட்டிருக்கவேண்டும். மின்சாரத்தின் அளவு அதிகமாகும்போது அதனைக் கையாள்வதில் அதிக கவனம் தேவையாகிறது. கையாளும் கம்பி, சேமிப்புக்கலம் முதலியவையும் அதற்கேற்ப அவதானமாகத் தயாரிக்கப்படுகின்றன. கையாள்பவர் தம்மைக் காவலிட்டுப் பலப்படுத்திக் கொள்கிறார். அதன் செயற்பாடு புரியாதோர் எழுந்தமானமாகக் கையாள முற்பட்டால் எதிர்விளைவுகள் ஏற்படும். சாதாரண மின்சக்திக்கே இவ்வளவு ஏற்பாடென்றால் பிரபஞ்சத்தையே இயக்கிக் கொண்டிருக்கும் திருவருட்சக்தியைக் கையாள்வதில் எவ்வளவு முன்னாயத்தங்களும் கவனமும் தேவை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

அருட்சக்தியை ஆவாஹனம் செய்துவைக்கப்படும் திருவுருவங்கள் நல்லமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருங்கல்லால் ஆக்கப்படவேண்டும். (ஆண்கல், பெண்கல், அலிக்கல் என்ற பேதங்களும் அவை பெறப்படும் இடங்களும் முக்கியம்) அல்லது சரியான முறையில் கலக்கப்பட்ட உலோகக் கலவையாக (பஞ்சலோகம்) இருக்கவேண்டும். அவை ஆகமங்களில் சொல்லப்பட்ட அளவுப்பிரமாணங்களில், அதற்கேற்ற அங்கலட்சணங்களுடன் உரிய ஆடை அணிகலங்கள், ஆயுதங்களுடன் செதுக்கப்பட்டு அல்லது வார்க்கப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். இந்தச் சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பாசாரி எனப்படுகிறார். அவருக்கென்று சில நியமங்கள், ஒழுக்கங்கள், பாரம்பரியக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. சிலையின் விதிமுறைகள் மட்டுமல்லாமல் சிலை செய்பவரின் விதிமுறைகளும் சிலையின் சக்தியை நிர்ணயிக்கும். செய்யப்படும் திருவுருவை மனத்தில் கற்பனை செய்து அதன் தியான சுலோகத்தை உச்சரித்தவராக, அத்திருவுருவில் லயித்த மனதுடையவராக அவர் அச்செயலில் ஈடுபடும்போது அவரது எண்ண அலைகள் இயல்பாக அந்தச் சிலையின் உருவாக்கத்திற்கு உதவுகின்றன. சிலை செய்யப்படும் சிற்பாலயத்திலும் அத்தகைய புனிதமான அலைகளும் கதிர்வீச்சுக்களும் இருக்கவேண்டும்.

திருவுருவை ஸ்தாபித்து வழிபாடியற்றும் ஆலயமும் சிற்பாசாரியினால் முன்சொன்ன வகையிலே உருவாக்கப் படுகிறது. அதற்கென்று அளவுப் பிரமாணங்களும் அமைப்பு விதிகளும் ஆகமங்களிலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆகமங்களின் வழிநூல்களான சிற்ப சாஸ்திரங்கள் இவ்விதிமுறைகளை விரித்துக் கூறுகின்றன. மூன்றுபுறமும் மூடப்பட்டு முன்புறம் மட்டும் திறந்ததாகக் கருவறை அமைக்கப்படுகிறது. மேலே விமானம் அமைகிறது.

'மான' என்பது அளவைக் குறிக்கும். விமான என்பது மிகவும் துல்லியமான அளவு எனக் கருதலாம். எனவே விமானம் அமைக்கும்போது கவனிக்கவேண்டிய அளவுப்பிரமாணங்களின் முக்கியத்துவத்தை அச் சொல்லின் பொருளே குறித்து நிற்பதைக் காணலாம். வான் நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களாக அவை அமைந்திருப்பதுடன் உச்சியில் உலோகக் கலசங்களையும் கொண்டிருக்கும். நாற்றிசையில் முப்புறமும், மேல், கீழ் ஆகிய பகுதிகளும் கருங்கல்லினால் (அல்லது வெள்ளைக்கல், அதமபட்சமாகச் செங்கல்) அமைக்கப்படுவது அதிர்வுகளையும் கதிர்வீச்சுக்களையும் நெறிப்படுத்தி ஒலி, ஒளி, முதலிய புறச்சக்திகளையும் திருவருட்சக்தியாகிய

அகச்சக்தியையும் உள்வாங்கிச் சேமித்து வைத்திருந்து முன்புற வாயிலினூடாக அளவறிந்து வெளிவிடுவதற்காகவே. ஆகாய வெளியில் பரந்து நிறைந்து மறைந்திருக்கும் பிரபஞ்ச சக்தியாகிய இறையருட்சக்தியை மேல்நோக்கிக் குவிந்து கூர்மையாக நிற்கும் உலோகப் பொருளாகிய கலசங்கள் தாங்கிய விமானம் என்னும் ஸ்தூபி ஈர்த்துக் கீழேயுள்ள திருவுருவத்தில் சேமிக்கின்றது.

தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் 'சபை' என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும். இவை விழாக்களின்போது வீதி உலாவுக்கு எழுந்தருளுகின்றன. சக்தியைத் தற்காலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளிவிடுவதன் மூலம் எல்லா வெளியிடங்களிலும் சக்திக் கதிர்வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

ஆண்டவனை நமக்கு அருகிலிருத்துவதற்கான ஆயத்தங்கள் இவ்வாறு விக்கிரக உருவாக்கத்துடனும் ஆலய நிர்மாணத்துடனும் நிறைவடைந்தபின் அத்திருவுருவில் அருட்சக்தியை உட்புகச்செய்வதற்காக (ஆவாஹனம்) கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறுகின்றன.

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தியை ஒருங்கு குவிப்பதற்கு ஐம்பூதங்களினூடான படிமுறைக் கிரியைகள் உதவுகின்றன. சூரிய சக்தியைப் பூதக் கண்ணாடியூடாகக் குவித்து அதன்சக்தியை ஒருங்கு சேர்ப்பதன்மூலம் பஞ்சினை எரிப்பது போன்றதே இது என விளங்கிக்கொள்ளலாம்.

"பிரம்மண ஆகாசாத் சம்பூதஹ
ஆகாசாத் வாயுஹு
வாயோர் அக்னிஹி
அக்னேர் ஆபஹ
அத்ப்யஹ் ப்ருதுவீ" என்பது உபநிடத வாக்கியம்.

"பிரம்மமானது ஆகாயத்திலிருந்து தோன்றி, வாயுவுக்கும் வாயுவிலிருந்து அக்னிக்கும், அக்னியிலிருந்து தண்ணீருக்கும், தண்ணீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகிறது" என்பதே இதன் விளக்கமாகும்.

ஆகாயம் என்பது காட்சிக்கும் தொடுகைக்கும் அப்பாற்பட்ட பரவெளி மட்டுமே. அதன் அடுத்த நிலையாகிய காற்று தொடுகைக்கு உட்படுமெனினும் கட்சிக்கு அடங்காதது. அடுத்த நிலையாகிய தீ தொடுகைக்கும் காட்சிக்கும் உட்பட்டதே எனினும் தொட்டுணர்வதற்கு அப்பாற்பட்ட சக்தியை உடையது. நான்காம் நிலையிலுள்ள நீர் தொடுகைக்கும் காட்சிக்கும் உடன்படுவதாகவும் நமது இலகுவான பயன்பாட்டுக்குரியதாகவும் இருப்பினும் நிலையான வடிவத்தை அது பெறுவதில்லை. இறுதிநிலையாகிய பூமி (நிலம் என்னும் தரையில் பெறப்படும் மண், கல், உலோகம் என்பன) எல்லா வகையிலும் எமக்கு உகந்ததாக, வேண்டிய உருவைப் பெறவல்லதாக உள்ளது.

இதேபோல மந்திரங்களின் அதிர்வுகள் பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் தன்மையுடைய ஒத்த அதிர்வுகளைக் கொண்டிருக்கின்றன. அவை கதிர்வீச்சுப்போல பேரருட்சக்தியைக் கும்பத்திலும் அக்கினியிலும் விக்கிரகத்திலும் கொண்டுவந்து சேர்க்கத்தக்கன. பிரதிஷ்டையில் அக்கினி, கும்பம், விக்கிரகம் ஆகிய மூன்று இடங்களிலும் திருவருட்சக்தி பொலிவுற்று விளங்குகிறது. இறுதியில் அக்கினியிலுள்ள சக்தி கும்ப நீரில் சேர்க்கப்பட்டு அது அபிஷேகத்தின்மூலம் விக்கிரகத்திலே சேர்க்கப்படுகிறது.

அக்கினி அளவற்ற சக்தி வாய்ந்தது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது அது. நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உருவாக்கித் தருவதும் அது. நம்மையே அழித்துவிடுவதும் அக்கினியே. எந்த அசுத்தத்தையும் தூய்மைசெய்யும் சக்தியும் அதற்குண்டு. பிரபஞ்சத்தையே இயங்கச்செய்யும் மூலப்பொருளாக நடுவில் நின்று சுழன்றுகொண்டிருக்கும் சூரியன் ஓர் அக்கினிக் கோளமன்றோ? அதனால்தான் ஆதியிலிருந்து இன்றளவும் அக்கினி ஓர் தெய்வ சக்தியாக யாவராலும் வணங்கப்படுகிறது. அத்தகைய அக்கினி மூலமாகவே நாம் அருட்சக்தியைச் சேகரிக்க முற்படுவது பொருத்தமானதல்லவா?

எனவே, ஒன்றிலிருந்து முப்பத்துமூன்று குண்டம் வரை ஓமகுண்டங்களை யாகசாலையில் அமைத்து அங்கு எரியோம்பி அவற்றில் ஒவ்வொரு சக்திகளைத் தனித்தனியே வருவித்துப் பின்னர் அவை யாவற்றையும் பிரதான குண்டமாகிய ஒரு குண்டத்திலே சேர்த்து அதைப் பிரதான கும்பத்து நீரிலே சேர்த்து அதையும் அபிஷேகம் மூலம் விக்கிரகத்திலே சேர்க்கின்றோம்.

எல்லாமே 'டிஜிற்றல்' மயமாக இருக்கும் இன்றைய உலகில் அதன்மூலம் நாம் இதனை விளங்கிக்கொள்ள முயற்சிக்கலாம். மின் அஞ்சல் மூலம் நாம் ஒரு விடயத்தை அனுப்பும்போது ஒரே தடவையில் அனுப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அதனைப் பல பகுதிகளாகப் பிரித்து அனுப்புகின்றோம். பெறுபவர் பின்பு அவற்றை ஒன்று சேர்க்கிறார். மேலும், கணினியில் படங்களை உருவாக்கும்போது புள்ளிகளின் செறிவு அதிகரிக்கும்போது அவை துல்லியமானவையாக அமைவதைக் காணலாம். குறைந்த புள்ளிகள் உடைய படங்கள் கையாள இலகுவாக இருப்பினும் அவை செறிவு குறைந்தவையாக இருப்பதால் அதிக அழகுடன் காணப்படுவதில்லை.

இதே தத்துவம்தான் யாக குண்டங்களிலும் காணப்படுகிறது. அருட்செறிவு அதிகமாக இருக்கவேண்டுமானால் அதிக குண்டங்களை உருவாக்கிப் பகுதி பகுதியாகச் சக்தியைச் சேகரிக்கும்போது துல்லியமான சக்திச் சேமிப்பு கிடைக்கும். அதற்கான இடம் பொருள், ஏவல் கிடைக்காதவிடத்துக் குறைந்த எண்ணிக்கையில் குண்டங்களை அமைத்து ஓரளவு சக்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுவாக, நவகுண்டம் எனப்படும் ஒன்பது குண்டம் சாதாரண நிலையில் போதுமானது. அதற்கு அடுத்தபடியாக பஞ்சகுண்டம் எனப்படும் ஐந்து குண்ட முறை பயன்படுகின்றது. பஞ்ச பூதங்களின் வழியாகச் சேர்க்கப்படும் சக்தி பஞ்சகுண்டங்கள் மூலமாகச் சேர்க்கப்படும்போது அதில் ஒரு பொருத்தப்பாடும் உள்ளது. அதன் விரிந்த நிலையாகிய அட்டமூர்த்திகளின் வழியாக சக்தியைச் சேகரிக்கும் முறை நவகுண்டத்தில் பயன்படுகிறது. இங்கு எட்டுக் குண்டங்களில் அட்ட மூர்த்திகளும் பிரதான குண்டமாகிய ஒன்பதாவது குண்டத்திலே ஆலய மூல மூர்த்தியும் எழுந்தருளுவர்.

யாகசாலையின் நடுவிலே வேதிகை என்னும் மேடையில் பிரதான கும்பம் அமைந்திருக்கும். அதில் பிரதான மூர்த்தி ஆவாஹனம் செய்யப்பட்டுத் தினமும் மந்திர உச்சாரணம் மூலம் உருவேற்றப்பட்டு அருட்பொலிவோடு விளங்குவார். பிரதான குண்டத்தில் சிவாக்கினி முறைப்படி வளர்க்கப்பட்டு அங்கிருந்து ஏனைய குண்டங்களிலும் சேர்க்கப்படும். பிரதான குண்டத்திலிருப்பது சிவாக்கினி. இந்த அக்கினியில்தான் மூலமூர்த்தியின் பிரதான அம்சம் ஆவாஹனம் செய்யப்படும்.

பிரதானமான இந்த யாகசாலைக் கிரியைகளுக்கு அங்கமாக, முன்னேற்பாடாக பூர்வாங்கக் கிரியைகள் பல செய்யப்படுகின்றன. அவை பயிர்ச்செய்கைக்கு முன் வயலைத் தயார் செய்வதைப் போன்றவை. வயலை உழுது பண்படுத்தி அங்கிருந்து கற்கள், வேர்கள், களைகள் முதலிய வேண்டாதவற்றை அகற்றி நீர்பாய்ச்சி சொகுசுபடுத்தி அதன்பின்னரே விதைக்கப்படுகிறது. இறைதிருவுருவத்தையும் ஆலயத்தையும் அதன் சூழலையும் தூய்மை செய்து புனிதப்படுத்தி, இடையூறுகள் நேராமல் காவலிட்டு, தீய சக்திளை அகற்றிப் பாதுகாப்பு வேலிகளை இட்டு அதன்பின் அங்கு படிப்படியாக சக்தியை உருவாக்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

மந்திரம், பாவனை, கிரியை என முத்திறத்ததாக இவை அமைகின்றன. மந்திரங்களின் ஒலி அதிர்வுகள் சக்திச் செறிவை ஏற்படுத்துகின்றன. பாவனை என்பது மனோதத்துவம் - மனோசக்தி (Will Power) சார்ந்தது.

மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும், மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதார பூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்டுகிறது. ஒரு வைத்தியரின் போதனைகளால், அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகி விடுகிறது. மேலும், சுயவசிய முறைப்படி தனது உடலுறுப்புக்களைத் தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால் நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும். ஆக, இறைசக்தி இங்கு நிலைபேறாகிறது என்ற நம்பிக்கை சிவாசாரியாரிடத்தும் அடியார்களிடத்தும் இருப்பதே பாவனை என்பதாகும். கிரியை என்பது செயற்பாடுகளைக் குறிக்கும்.

ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமைய வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால்தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை நாம் நிகழ்த்தும்போது அதற்கென ஆய்வுகூடங்கள் தேவைப்படுகின்றன. நினைத்த இடங்களிலெல்லாம் அவற்றைச் செய்துவிடமுடியாது. சூழல் அதற்கான ஒழுங்கமைப்பில் இருக்கவேண்டும். அளவுப் பிரமாணங்கள், வெப்பநிலைகள், ஓசைகளின் அளவு, சேர்க்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் செறிவு முதலியன அவற்றுக்கான கருவிகள் என இத்தனை விடயங்கள் ஒருங்குசேரும்போதுதான் பரிசோதனைகளைச் சரியானமுறையில் நிகழ்த்தி விளைவுகளைக் கண்டறிகிறோம். மருத்துவ சிகிச்சை நடக்கும்போதும் இதே நிலைமைகளை நாம் காணலாம். இதேபோன்றதொரு செயல்தான் பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் பேரருட் சக்தியை நாம் நமக்குள் பெற்று நம்மை உயர்த்தி அந்த அருட்சக்தியோடு ஒன்ற முயற்சிக்கின்ற வழிபாட்டு முறைகளும்.

ஆலயமும் அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் சரியாக அமைந்து மந்திரம், பாவனை, கிரியைகளும் ஒழுங்குற நடைபெற்று உயர்வான கும்பாபிஷேகம் மூலம் திருவருட்பொலிவு அங்கு ஏற்பட்டிருக்கும் நிலையில் நாம் அதனைப் பெற்று இன்புறத் தயாராக இருக்கவேண்டும் என்பதும் முக்கியமானதல்லவா?

ஆண்டவன் அருட்கதிர் தகுதியான இடங்களில் மட்டுமே பாயும். ஆசாரம், ஒழுக்கம், தூய்மை, நற்குண நற்செயல்கள் என்பன சற்பாத்திரனுக்கு இலக்கணம். நல்ல பாத்திரத்தில்தான் நல்ல பொருட்களை ஏந்தலாம். ஆசாரம் என்பதும் நன்னடத்தை ஆகிய ஒழுக்கத்தையே குறிக்கும். எனினும், ஆன்மீக நடைமுறையில் ஆசாரம் என்ற சொல் புற ஒழுக்கம் சார்ந்த சில நடைமுறைச் செயற்பாடுகளையும் சுட்டிநிற்கிறது.

ஆலய வழிபாடு என்றதும் முதலில் சொல்லப்படும் செயற்பாடு, 'நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை உடுத்தி' என ஆரம்பமாகிறது. உடல் அல்லது உடைகள் சார்ந்த புறவயமான தூய்மை நிலைமை ஆசாரம் ஆகும்.

ஆசௌசமுடைய ஒருவரில் தீண்டுதல் (முட்டுதல்), அவர்களது இல்லதிதற்குள் செல்லுதல், அவர்களிடம் உணவோ நீரோ அருந்துதல் இவையெல்லாம் ஆசாரமற்ற செயற்பாடுகளாகும். இவற்றை நன்கு சிந்தித்துப் பார்த்தால் இவை யாவுமே சுகாதாரப் பழக்கவழக்கங்கள் என்பதையும் தூய்மையைப் பேணும் நடைமுறைகள் என்பதையும் புரிந்துகொள்ளலாம். அறிவியல் - மனோதத்துவ - ரீதியில் பார்க்கும்போது ஆசாரமான பழக்கவழக்கங்கள் சில உயர்நிலை அதிர்வுகளை அல்லது தூண்டல்களை உள்ளத்தில் ஏற்படுத்தக் கூடியவை என்பதையும் எதிர்மறையாக அவை உதாசீனப்படுத்தப்படும்போது மந்தமான அதிர்வுகள் தூண்டப்படலாம் என்பதையும் உணரமுடியும்.

எனவே, உடல்நிலைசார்ந்த புறவயத் தூய்மையும் உளம் சார்ந்த தியாக உணர்வும் சிரத்தையும் பற்றுறுதியும் நம்பிக்கையும் மனிதாபிமானம், ஜீவகாருண்ணியம் முதலிய பண்பு நலன்களும் இருந்தால் சற்பாத்திரராகி அருட்சக்தியை ஏற்றுக்கொள்ளும் பக்குவநிலையைப் பெற்றுவிடலாம்.

இவை யாவும் சரியாக அமையும்போது நமது உடலும் உள்ளமும் சரியான சக்திப் பேற்றுக்கேற்ற அதிர்வுகளை உடையவர்களாகின்றோம். அதனால் படிப்படியாக அருட்சக்தியால் உயர்நிலையடைந்துவிடுகிறோம். பக்குவமடைந்த இந்த உடலிலிருந்து எளிதாக ஜீவான்மா விடுபட்டுப் பரமான்மாவுடன் ஐக்கியமடைந்துவிடுகிறது. இதுவே சைவசமயத்தில் எதிர்பார்க்கப்படும் உயிரின் உன்னதமான உயர்நிலையாகும்.

இதற்கமைவாக நிகழும் கும்பாபிஷேகத்தின் வகைகளையும் அதன் உட்பிரிவாக அமையும் கிரியைகள் ஒவ்வொன்றையும் விரிவாக நோக்கலாம்.

பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம் என நால்வகைப்படுமென்று சிவாகமங்கள் வகுக்கின்றன. ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது **அநாவர்த்தனப் பிரதிஷ்டை.** முன்பிருந்த ஆலயம் முற்றாக அழிந்து விட்டால், அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் **ஆவர்த்தனப்** பிரதிஷ்டை. பூஜை வழிபாடுகள் நடைபெறும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து திருத்த வேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது **புனராவர்த்தனப் பிரதிஷ்டை.** ஆலயத்தினுள் மரணம் நிகழுதல், கள்வர் முதலிய ஆசாரக் குறைவுடையோர் நுழைதல் போன்ற காரணங்களால் நிகழும் பிரதிஷ்டை **அந்தரிதப் பிரதிஷ்டை.**

இந் நான்கு வகைகளில் அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்று வகைப் பிரதிஷ்டைக்கும் சுபமுகூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் சுத்தமாக இருக்கும்படியும், லக்கினம் ஸ்திரராசியாக இருக்கும்படியும், கிரகங்கள் அநுகூலமான இடங்களில் இருக்குமாறும் நன்கு கவனித்து முகூர்த்தம் நிர்ணயிக்கப்படும்.

மேலும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சிவாசாரியாருக்கும், ஆலய தர்மகர்த்தாவுக்கும் அநுகூலமானதாகவும் இம் முகூர்த்தைக் கணித்துக்கொள்வர்.

கும்பாபிஷேக விழாவானது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்வதால் இதனைத் தரிசித்தல் பெரும் பேறாகும். யாக தரிசனம் செய்தலும், ஓமப்புகையைச் சுவாசித்தலும், மந்திர ஒலிகளைக் கேட்டலும் உடல் நலத்தையும், புண்ணியத்தையும் ஒருங்கே தருவன என்று அறிஞர் கூறுவர்.

கும்பாபிஷேகமானது பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டும் என்பது விதி. தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி, அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். கருங்கல்லினால் செய்யப்பட்ட பீடத்திலே கருங்கல் விக்கிரகத்தை வைத்து எட்டுப் பொருட்களின் கலவையான அஷ்டபந்தனம் என்ற மருந்தினால் அவை இணைக்கப்படுகின்றன.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய அஷ்ட மூர்த்திகளின் அம்சமான குங்கிலியம், கொம்பரக்கு, சுக்கான்கல், தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமைவெண்ணெய், சாதிலிங்கம் என்னும் எட்டுப் பொருட்களையும் உரிய அளவில் சேர்த்து இடித்துத் தயாரிக்கப்படுவதே அஷ்டபந்தனமாகும்.

பூரணமான ஒரு மஹா கும்பாபிஷேகமானது அறுபத்து நான்கு வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டது எனச் சில ஆகமங்கள் கூற, வேறு சில ஆகமங்கள் அதனைச் சுருக்கி ஐம்பத்தைந்து கிரியைகளையுடையது எனவும் விதிக்கின்றன.

இவற்றுள் முகூர்த்த நிர்ணயம், ஆசார்ய வரணம், சல்ய உத்தாரணம், திரவியபாகம், கர்ப்ப நியாசம், கணேச பூஜை, அநுஜ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கின ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரட்ஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்சணம், சயனாரோபணம், அக்கினிகாரியம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பப் பிரதட்ஷணம், கர்ப்பக்கிரக பதவிந்நியாசம், ரத்நநியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், ஷடத்துவநியாசம், சாங்கோபாங்கப் பிரத்தியங்காங்க நியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்பஉத்தாபனம், சகளீகரணம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரட்சாவிசர்ஜனம், அவபிருதம், ஆசார்யோற்சவம் என்பன முக்கியமான கிரியைகளாகும்.

**சல்யோத்தாரணம்** (விக்கிரகத்திற்கான கருங்கல்லைத் தேர்ந்தெடுத்தல்), ஜலாதிவாசம் (நீரில் இறைதிருவத்தை மூழ்க வைத்தல்), தான்யாதிவாசம் (தானியத்தில் - நெல்- திருவுருவத்தை வைத்தல்), நயோன்மீலனம் (கண் திறத்தல்), கிராமப் பிரதட்சணம் முதலிய கிரியைகள் புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும்போது நடைபெறும். ஏனையவற்றுக்கு இவை இல்லை.

கும்பாபிஷேகத்தின் அங்கக் கிரியைகளை நோக்குமுன் **பாலஸ்தாபனம்** என்பது பற்றிச் சிறிது நோக்குவோம். வழிபாடு நடந்துவரும் ஓர் ஆலயத்திலே திருத்த வேலைகள் செய்யவேண்டி ஏற்பட்டால், அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருட காலகட்டம் கடந்துவிட்டால் அங்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும். அதற்காக அங்குள்ள மூலமூர்த்தியிலே உள்ள தெய்வ சாந்நித்தியத்தை 'கலாகர்ஷணம்' (சக்தியைக் கவர்ந்தெடுத்தல்) முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாகனம் செய்து, பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதிமுறைப்படி அமைக்கப்பெற்ற பாலாலயத்தில் (இளங்கோயில்) ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாகனம் செய்து வைப்பர். இதுவே பாலஸ்தாபனம் எனப்படும்.

அதேநேரத்தில் இன்னொருவிதமாகவும் இச் செயற்பாடு நடைபெறும். புராதனமான சில ஆலயங்களில் (தமிழ்நாட்டின் ஆநேக ஆலயங்களில்) மூலமூர்த்தி பெயர்த்து எடுக்கப்படுவதில்லை. அருட்சக்தியை மட்டும் கலாகர்ஷணம்

மூலம் கும்பத்தில் எடுத்து பாலாலயத்தில் இதற்கெனத் தயார் செய்த பாலலிங்கம் அல்லது பாலமூர்த்தியில் (தற்காலிகமாக வழிபடப்படும் திருவுருவம்) ஆவாஹனம் செய்து அபிஷேகம் செய்து வைப்பர். பின்னர் மஹாகும்பாபிஷேகத்தின்போது மூலஸ்தான மூர்த்திக்கு அங்கிருந்தபடியே மருந்து சாத்தி பாலமூர்த்தியிலிருக்கும் சக்தியை மூலமூர்த்திக்கு ஆவாஹனம் செய்வதுண்டு.

கும்பாபிஷேகத்தின் சில முக்கியமான அங்கக் கிரியைகளின் அர்த்தமும், நோக்கமும் இனிக் கூறப்படும்.

**ஆசாரிய வரணம்:**

பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தப் போகும் சிவாசாரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துமாறு வேண்டுவதே இதன் அர்த்தம். சிவாசாரியரை சிவனாகவே பாவித்து அவரைப் பூஜித்து கும்பாபிஷேகத் திரவியங்களை அவரிடம் ஒப்புவித்தல் எஜமானது கடமையாகும். (வரணம் - வரித்தல்)

**அநுஜ்ஞை:**

அநுஜ்ஞை என்பது அனுமதி பெறுதல் ஆகும். ஒரு தாம்பாளத்தில் பச்சரியைப் பரப்பி அதில் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலைபாக்கு, சந்தணம், மஞ்சள், நாணயம், புஷ்பம், பத்திரம், தர்ப்பை என்பவற்றை வைத்து அவற்றைப் புண்ணியாக தீர்த்தம் தெளித்துத் துாய்மைப்படுத்தி அவற்றுக்குப் பூஜை நிகழ்த்துவர்.

அங்கு வந்திருக்கும் பிராம்மணோத்தமர்களிடமும், விக்கினேஸ்வரப்பெருமானிடமும், மூலமூர்த்தியிடமும், அஸ்திர தேவரிடமும், உற்சவமூர்த்தியிடமும் சென்று பூஜை செய்து கும்பாபிஷேகத்தை நன்முறையில் நடத்த அனுமதியும், ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவர்.

**திரவிய சுத்தி, திரவிய பாகம்:**

கும்பாபிஷேகத்திற்கான திரவியம் சிவத்திரவியமாக்குவதே திரவிய சுத்தி.

கும்பாபிஷேகத்திற்குரிய பொருட்களை முறைப்படி மந்திர சகிதமாக அந்தந்த தேவைகளுக்கேற்ப பிரித்தலே திரவிய விபாகம் எனப்படும். கும்பாபிஷேகத்திற்கென ஒதுக்கிய பணத்தை (ஏறக்குறைய ஆலய நிர்மாணத்திற்குச் செலவான தொகைக்குச் சமமான தொகையையே கும்பாபிஷேகத்திற்கும் செலவிட வேண்டும் என்பது ஆகமநூற் கருத்து)

“என் செயலாவது யாதொன்றுமில்லை” என்ற உணர்வோடு, “சிவன் நமக்கு வழங்கிய செல்வம் சிவத்திரவியமே அன்றி நமது பொருளல்ல” என்ற தெளிவோடு, “அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்ற அறிவோடு ஆணவம் அடங்கி அடக்கமாக சிவப்பணி புரியும் பாங்கினை இக்கிரியைகள் தோற்றுவிக்கின்றன. அதுமட்டுமல்லாமல் மனம் போனபடி நாம் செலவு செய்யாமல் கும்பாபிஷேகச் செலவுகள் யாவும் சிவன் விருப்பப்படி, ஆகமத்தில் அவன் தெரிவித்த வகையிலேயே செலவிடப்படவேண்டும் என்பதற்காகவே திரவிய விபாகம் என்ற கிரியை நடைபெறுகிறது. ஆகமம் இதற்காக வழங்கியிருக்கும் பருப்படியான ஒரு பாதீட்டை (பட்ஜெட்) நாம் இங்கு காணலாம்.

மொத்தத் திரவியங்களை பதினொரு பாகங்களாக வகுத்துக்கொண்டால்,

கும்பாபிஷேக யாகங்களுக்காக மூன்று பாகம்
அபிஷேகச் செலவுகளுக்கு ஒரு பாகம்
பிரதம சிவாசார்யருக்காக ஒரு பாகம்
ஏனைய குருமாருக்கு ஒரு பாகம்
பிராமணர்களின் உணவிற்காக இரு பாகம்
வேதபாராயணம், பத்ததி படித்தல் முதலியவற்றுக்காக இரு பாகம்
மண்டலாபிஷேகத்திற்காக ஒரு பாகம்

இவ்வாறான ஒரு பாதீட்டை விளக்கும் வகையில் மொத்தத் திரவியங்களின் பதினொரு பாகம் என்பதற்கு அடையாளமாக பதினொரு நாணயக் குற்றிகளை எடுத்து திரவியங்களை சுத்திசெய்வதைக் காட்ட அந்த நாணயங்களை பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்து, அதில் சிவாஸ்திரத்தைப் பூஜித்து அதன்பின் அதனைப் பகுத்து பரிபாலகர்களிடம் சிவாச்சாரியர் வழங்குவதாக இந்த ஆரம்பக் கிரியை நடைபெறுகிறது.

**கிராமசாந்தி:**

ஆலயம் அமைந்துள்ள கிராமத்திலுள்ள தீயசக்திகள், துஷ்டத்தன்மைகள் முதலியவற்றால் பெருவிழாவுக்கு இடையூறு ஏற்படாமல் மங்கலமுண்டாகும்படி காவற்தெய்வமாகிய வைரவப் பெருமானுக்கு விஷேட பூஜை, ஓமம், பலி என்பன செய்தலே கிராமசாந்தியாகும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகள் முதலியவற்றால் ஏற்படும் தீமைகளும் அசுரர், ராடசதர், பூதர், பைசாசர் என உருவகப்படுத்தப்படுகின்றன. எவையானாலும் தீயனவற்றை ஒழிப்பதே கிராமசாந்தி.

ஆலயத்தின் கிழக்கு, மேற்கு அல்லது நிருதி திசையில் ஒரு தற்காலிக மண்டபம் அமைத்து வைரவருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பம் வைத்து ஒழுங்குசெய்தபின் அஸ்திர தேவரை மங்கல வாத்தியசகிதம் வீதி வலம் வரச்செய்து அங்கு எழுந்தருளச் செய்வர். கும்பங்களில் மட்டுமின்றி யந்திரம் வரைந்து அதிலும் வைரவரைப் பரிவாரசகிதம் ஏழு ஆவரணங்களுடன் ஆவாகனம் செய்து பூஜைகள் நிகழ்த்துவர். ராட்சதர்களுக்கு பலி உருண்டைகள் வழங்கித் திருப்தி செய்தபின் வைரவரை அக்கினியிலும் ஆவாகனம் செய்து அன்னம், வடை முதலியனவும் ஆகுதியாக

இடுவர். பலிப் பொருளான நீற்றுப்பூசனிக்காய், கத்தி அவற்றையும் பூஜித்து பசுகாயத்ரியை உச்சரித்து நீற்றுக்காயை வெட்டிப் பலி கொடுத்து அதன் உட்பாகத்தை ஓமம் செய்வர். பூர்ணாகுதி கொடுத்தபின் சகல தேவர்களுக்கும் பலதாம்பூலம் நைவேத்தியம் செய்து நீராஜனம் செய்தபின் சுவஸ்தானங்களுக்கு எழுந்தருளுவிப்பர். இதன் பின் வலம்வந்து கைகால்களைச் சுத்தம் செய்தபின்னர் ஆலயத்தினுள் செல்லுதல் மரபு.

**பிரவேசபலி:**

இடையூறுகள் நீங்கி, ஆரம்பிக்கும் காரியம் இனிது நிறைவேறும் பொருட்டாகவும், குற்றங்குறைகள் தவிர்க்கப்படுவதற்காகவும் செய்யப்படும் இக்கிரியையும் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி இவைகளைப் போன்றதே. ஆயின் இதில் பிரம்மஸ்தானம், இந்திரஸ்தானம் முதல் ஈசானஸ்தானம் வரையிலான நவசந்திகளிலும் அந்தந்த சக்திகளை அவர்களுக்குரிய மண்டலங்களை அரிசி மாவினால் வரைந்து அங்கு ஆவாகனம் செய்து, வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய், கமுகம்பூ, நெற்பொரி, இளநீர் என்பவற்றை நிவேதித்து பலியுருண்டைகளையும் வழங்கி மகிழ்விப்பர்.அதன்பின் இறைகாரியத்திற்கென அப் பிரதேசம் பயன்படுத்தப்படுவதால் தீய சக்திகள் யாவும் கடல், காடு, மலை, நதி முதலிய இடங்களுக்குச் சென்றுவிடவேண்டுமென வேண்டியபின் அட்டதிக்குப் பாலகர்களை அவ்விடத்தில் ஆவாஹனம் செய்து பூசித்து காவற் கடமையை அவர்களிடம் ஒப்புவிப்பர்.

அட்டதிக்குப் பாலகர் எனப்படுவோர் எட்டுத் திசைகளையும் காக்கின்ற எண்திசைக் காவலர்களாவர். கிழக்கு - இந்திரன், தென்கிழக்கு - அக்னிபகவான், தெற்கு - யமன், தென்மேற்கு - நிருதி, மேற்கு - வருணன், வடமேற்கு - வாயு பகவான், வடக்கு - குபேரன், வடகிழக்கு - ஈசானன்.

**ரக்ஷோக்ன ஹோமம்:**

ரக்ஷோக்ன தேவரைத் (ரா~சர்களை அழிப்பவர்) திருப்தி செய்யும் இக்கிரியையின் நோக்கமும், பிரவேசபலி, கிராமசாந்தி என்ற இவை போன்றதே. பிரவேச பலி மூலம் அகற்றப்பட்ட தீய சக்திகளில் ஏதாவது ஆலயத்தின் உட்பிராகாரத்தில் நுழைந்திருக்கக்கூடும் என்பதற்காக இந்த தேவரைப் பூசித்தபின் அக் கும்பத்தின் நீரால் ஆலய உட்பிராகாரம் தெளிக்கப்படும். கருவறையிலிருந்து ஆரம்பித்து வலம்வந்து கோபுரவாசல்வரை இந் நீர் தெளிக்கப்படும்.

**திசாஹோமம்,**

சிவாஸ்திரம், அகோராஸ்திரம், பாசுபதாஸ்திரம், ப்ரத்யங்கிராஸ்திரம் முதலிய அஸ்த்ர சக்திகளை (ஆயுதங்கள்) நான்கு கும்பங்களில் தனித்தனியே பூசித்து அவற்றுக்குரிய ஹோமங்களையும் செய்தபின் அந்தக் கும்ப நீரினால் ஆலய உள்வீதியின் நான்கு திசைகளிலும் தெளிப்பதன்மூலம் ஆயுதப்படையின் காவல் நிறுவப்படுகிறது.

**தீமைகளையகற்றிக் காவலிடும் பூர்வாங்கக் கிரியைகளின் தொகுப்பு நோக்கு:**

கிராம சாந்தியில் பூத பைசாச, ராட்சச, பிரம்மராட்சசர்கள் அவர்களுக்குரிய பலியினால் திருப்திசெய்யப்பட்டு அனுப்பப்பட்டபின் கிராமத்தின் காவலரான வடுகபைரவரிடம் காவல்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பிரவேச பலிமூலம் ஆலயத்தின் வெளிப்புறச் சூழலில் இருந்திருக்கக்கூடிய தீய சக்திகளைத் திருப்தி செய்வித்து தூர இடங்களுக்கு அகற்றியபின் அந்தத் திசைகளின் காவலர்களான இந்திரன், அக்னி முதலியவர்களை அழைத்து அவர்களிடம் காவல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதற்குப்பின்னரும் உட்புறங்களில் இவற்றையும் மீறி வந்து ஒளிந்துகொண்டிருக்கும் தீய சக்திகளை ரட்சோக்ன ஹோமம் மூலம் அகற்றித் திசாஹோமத்தில் ஆயுதப்படை மூலம் உள்வீதிக்கான காவல் ஸ்திரப்படுத்தப் படுகிறது.

**சம்ஹிதா ஹோமம், மூர்த்திஹோமம், சாந்திஹோமம் முதலியன:**

சம்ஹிதா மந்திரங்கள், பிரதான மூர்த்தி, அட்டமூர்த்திகள் இவர்களைத் தனித்தனியே கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜித்து அக்கினி வளர்த்து அங்கும் இவர்களை ஆவாகனம் செய்து ஹோமங்கள் நடத்தப்படும்.

பூரணமான பூஜையின்றி இருந்த மூல விக்கிரகத்தில் தெய்வ சாந்நித்தியத்தைப் படிப்படியாக அதிகரிக்கும் கிரியைகள் இவை. சிவாகமங்களில் கூறப்படும் மந்திரங்களில் மிக முக்கியமானவையும் அதிக இடங்களில் பயன்படுபவையும் சம்ஹிதா மந்திரங்கள் ஆகும். ஈசானம் முதலிய பஞ்ச ப்ரம்ம மந்திரங்களும் ஹ்ருதயம் முதலிய ஆறு அங்க மந்திரங்களுமாகப் பதினொரு மந்திரங்கள் இவை. இறைவனுடைய லயாங்கமாக அணிசெய்திருக்கும் இம் மந்திரங்கள் அவரது போகாங்கமாகவும் முதலாவது ஆவரணத்தில் அவரைச் சுற்றி அமர்ந்திருந்து அருள் செய்யும் வலிமை வாய்ந்தவை. இம் மந்திரங்கள் ஒரு கும்பத்திலும் அக்னியிலும் பூசிக்கப்படுவது சம்ஹிதாஹோமம்.

அட்ட மூர்த்திகளின் வடிவானவன் இறைவன். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் (ஆன்மா) ஆகிய அட்ட மூர்த்திகளையும் அவற்றுக்குரிய அதிபதிகளையும் ஒரு கும்பத்திலும் அக்கினியிலும் பூசிப்பது மூர்த்தி ஹோமம்.

அஸ்திர சக்தியானது தீமையைப் போக்கவல்லது. காவல் செய்வது. மனச்சாந்தி தருவது. நமது ஆலயக் கிரியைகள் பலவற்றிலும் அவ்வப்போது பாசுபதாஸ்திர மந்திரம் பூசிக்கப்படுவது வழக்கம். இங்கேயும் பாசுபதாஸ்திரமும் அதனைச் சுற்றி தசாயுதங்களும் பூசிக்கப்படுவது சாந்தி ஹோமம். இந்த மூன்று ஹோமத்தின் முடிவிலும் இக் கும்பங்கள் மூலவருக்கு அபிஷேகம் செய்யப்பட்டு அங்கு அருள்விளக்கம் ஏற்படுத்தப்படுகிறது.

**நவக்கிரக மகம்:**

பரிவார தெய்வங்களில் நவக்கிரகங்களுக்குத் தனியிடம் உண்டு. ஆன்மகோடிகளோடு நேரடித் தொடர்பு கொண்டு தமது கதிர்வீச்சுக்களால் உலகியல் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களையும், பலாபலன்களையும் செய்கின்றவர்கள்

நவக்கிரக நாயகர்கள். இவர்களைக் கும்பத்திலும், அக்கினியிலும் ஆவாகனம் செய்து உபசாரங்கள், ஆகுதிகள் வழங்கி வழிபடுவது நவக்கிரக மகம் எனப்படும். (மகம்- யாகம்).

**வாஸ்து சாந்தி:**

நிலத்தில் உள்ள குற்றங்குறைகளை நீக்குவதற்காக செய்யப்படுவது வாஸ்து சாந்தி என்னுங் கிரியை.

பூமிக்கு அதிபதி பிரம்மா. வாஸ்து புருஷன் பூமியுடன் தொடர்புடையவன். இவர்களை மகிழ்வித்து வழிபாடியற்றுவது வாஸ்து சாந்தியில் இடம்பெறுகிறது. வாஸ்து சாந்தி ஆலய மண்டபத்திலே செய்யப்படுகிறது.

வாஸ்து சாந்திக்குரிய வாஸ்து மண்டலம், நெல்லினை மேடையாகப் பரப்பி அதன் மேல் வாழையிலை இட்டு அதன்மேல் அரிசியைப் பரப்பி அதன் மேல் எள்ளினால் அல்லது அரிசி மாவினால் கோடுகள் வரைந்து அமைக்கப்படும். இம் மண்டலம் இரு வகையாக அமைக்கப்படும். ஆண் தெய்வங்களுக்குரியது மண்டுகபத வாஸ்து சாந்தி மண்டலம். பெண் தெய்வங்களுக் குரியது பரமசாயிபத வாஸ்துசாந்தி மண்டலம். சக்தி அம்சமான முருகனுக்கும் இதுவே உரியது.

இம் மண்டலத்துக்கு ஈசான திக்கில் காயத்திரி, சாவித்திரி ஆகிய இரு சக்திகளுடன் கூடிய பிரம்மாவிற்கும், சிவம் வர்த்தனிக்கும், மண்டலத்துக்கு கிழக்கில் புண்ணியாக வாசனத்துக்கும் கும்பங்கள் வைத்து அதன்முன் ஓமகுண்டம் அமைக்கப்பட்டிருக்கும்.
இங்கும் விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம், முதலிய பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து சிவம் வர்த்தனியையும், பிரம்மாவையும் கும்பத்தில் பூஜித்து மண்டலத்தில் வாஸ்துபுருஷனையும் பிற தேவதைகளையும் பூஜித்து பலிதானமும் கொடுத்து முறைப்படி அக்கினி காரியமும் செய்வர்.

இங்கும் கிராமசாந்தியைப் போலவே நீற்றுக்காயொன்றைப் பலியிடுவர். அதன்பின் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்துபுருஷனைப் பூஜித்து அக்கினியில் பொருத்தி எரியூளச் செய்தபின் அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள், வீதிகள் முதலிய இடங்களில் இழுத்துவந்து ஈசான திக்கில் போட்டு விடுவர். இவ்வுருவத்தின் பின்பாக வாஸ்துகும்ப நீர் தெளித்துச் செல்வர். வெட்டிய நீற்றுப் பூசணிக்காயையும் இதனுடன் எடுத்துச் சென்று போட்டுவிடுவர். இவறறைக் கொண்டு சென்றவர்கள் நீராடிவிட்டு ஆலயத்தினுள் வருதல் வேண்டும். (கைகால்களையாவது நன்கு சுத்தம் செய்தல் அவசியம்).

**மிருத்சங்கிரகணமும் அங்குரார்ப்பணமும்:**

நற்காரியங்கள் தொடங்கும்போது முளைப்பாலிகை இடுதலாகிய அங்குரார்ப்பணம் மிக முக்கியமாகச் செய்யப்படும். இதற்கு வேண்டிய மண்ணை மந்திரசகிதமாகப் பெறுவதே மிருத் சங்கிரகணமாகும். (மிருத் - மண்: சங்கிரகணம் - சேகரித்தல்).

ஆலயத்தின் ஈசானம், மேற்கு, வாயு அல்லது வடக்குத் திசையில் இது செய்யப்படும். அஸ்திர தேவரையும் எழுந்தருளச் செய்து மங்கல வாத்திய சகிதம் குரு இங்கு வந்து சேருவார்.

அஸ்திர தேவரையும், அதற்கு முன் (கிழக்கே) சப்த வாரிதி கும்பத்தையும் ஸ்தாபிப்பர். அதற்கு கிழக்கே நவபதம் அதற்கும் முன் அஷ்டதள பத்மம் (எட்டிதழ்க் கமலம்) அதற்கும்முன் நாற்கோணம் என்பவற்றை அரிசிமாவினால் அமைப்பர். நாற்கோணத்தில் மண்வெட்டி ஒன்று கூர்ச்சம், மாவிலை என்பன கட்டப்பட்டதாக வைக்கப்பட்டிருக்கும்.

பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றியபின் கும்பத்திலே ஏழு சமுத்திரங்களையம், நவகோஷ்டத்தில் பிரம்மாவையும் எட்டு மண்டல தேவர்களையும், பத்மத்திலே அஷ்டதிக்கு பாலகர்களையும் பூமிதேவியையும் பூஜிப்பர். மண்வெட்டியின் குற்ற நீக்கத்திற்காக தைலம், பால், தயிர், இளநீர் என்பவற்றால் அபிஷேகித்தபின் மும்முறை மண்ணை வெட்டி ஒரு தட்டிலிட்டு பட்டினால் மூடுவர். சப்தசமுத்திர கும்ப ஜலத்தினால் மண் எடுத்த இடத்தை அபிஷேகம் செய்து நவதானியமிட்டு சமதளமாக்குவர்.

சகல தேவர்களையும் உத்வாசனம் செய்து (தத்தம் இடத்திற்கு எழுந்தருளச் செய்து) மண் நிரப்பிய தட்டத்துடன்வீதி வலம்வந்து யாகசாலையை அடைவர்.

யாகசாலையின் வாயுதிக்கிலே (வடமேற்கு) கார்த்திகை, ரோகிணி சகிதமாக அமிர்தேஸ்வர கும்பம் வைத்து (அமிர்தேஸ்வரன் - சந்திரன்) சுற்றிவர துவாதச ஆதித்தியர்களுக்கு (பன்னிரு சூரியர்கள்) பன்னிரண்டு சிறிய மண்சட்டிகளும் வைக்கப்பட்டிருக்கும். மிருத்சங்கிரகணத்தில் எடுத்துவந்த மண்ணினால் இவை நிரப்பப்பட்டு வில்வம், அரசு, மாவிலை இவற்றால் அலங்கரிக்கப்படும்.

பூர்வாங்கக் கிரியைகளை அடுத்து சந்திரனையும், பன்னிரு சூரியர்களையும் பூஜித்தபின் தூய்மையான பாத்திரமொன்றிலே பசுப்பால் விட்டு அதில் நவதானியத்தை இட்டுப் பூஜித்து உரிய மந்திரங்களுடன் பாலிகைகளில் (மண்சட்டி) அதனை விதைப்பர். சந்திரகும்ப நீரை இவற்றுக்கு வார்த்து மீண்டும் கும்பத்தை நீரால் நிரப்பி ஸ்தாபிப்பர்.

இவ்வங்குரார்ப்பண முளையானது பசுமையாக நன்கு செழித்து வளர்ந்தால் கிராமம் சிறக்குமென்பது ஐதீகம். (அங்குரம் - முளை).

**ரட்சாபந்தனம்:**

ரட்சா என்பது காப்பு. காவலுக்காக கட்டப்படுவது. காப்புக்கட்டுதல். எடுத்த கருமம் தடையின்றி நிறைவேறுவதற்கும், அக் கருமமன்றி வேறுசெயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் காப்புக் கட்டப்படும்.

சிவாச்சாரியாரும், ஏனைய குருமாரும் தர்மகர்த்தாவும் ரட்சாபந்தனம் செய்துகொண்ட பின் கும்பாபிஷேகம் முடியும்வரை ஆலயச் சூலை விட்டு அப்பாற் செல்லலாகாது. இக்கால எல்லையில் அவர்களின் உறவினரால் ஏற்படும் ஆசௌசம் முதலியன அவர்களைத் தீண்டா.

காவலுக்காக கட்டப்படும் காப்பு மூர்த்திகளுக்கும் கட்டப்படுவது வழக்கம். எல்லா உலகங்களையும் காக்கும் அவருக்கே காவலா என ஐயுறலாம். சகல பிரபஞ்சங்களும் இறைவனுள் அடங்கும். அவருள் அடங்கிய அனைவருக்கும் காவல் செய்யும் காரணமாகவே அத் திருவுருவங்களுக்கு காவல் செய்யப்படுகிறது. மேலும் தன் குழந்தைகளின் நோய் தீரத் தான் மருந்துண்ணும் தாய் போல நமக்காக இறைவன் காப்புக்கட்டும் பாவனையும் இதில் தொனிக்கிறது.

'கங்கணம் கட்டுதல்' என்ற மரபுச் சொற்றொடர் இங்கு நோக்கற்பாலது. ஒரு காரியத்தை விடாது முயன்று செய்து முடிக்கத் தீர்மானிப்பதைக் கங்கணம் கட்டுதல் என்று சொல்லுவர். கங்கணம் என்பது காப்பு. ஏடுத்த காரியத்தை நிறைவேற்றி முடிக்கும் தீர்மானம் கொள்வது இக் கிரியையின் நோக்கமெனவும் கொள்ளலாம்.

ஒருதட்டில் அரிசி பரப்பி அதில் தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம், மாவிலை, வீபூதி என்பனவும், ரட்சா சூத்திரம் (காப்புக் கயிறு) எனப்படும் மஞ்சள் பூசிய நூலும் வைக்கப் பட்டிருக்கும்.

சிவாச்சாரியர் பூர்வாங்க கிரியைகளைச் செவ்வனே நிறைவேற்றிய பின் ரட்சாபந்தன பொருள்களைப் பூஜிப்பர். இதன்பின் மங்கல வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியர் தனது வலக்கை மணிக்கட்டில் ரட்சை நூலைக் கட்டி விபூதியால் முடிச்சிலே காப்பிட்டுக் கொள்வார்.

**நூதன மூர்த்திகளுக்கான அதிவாசாதி கிரியைகள்:**

புதிதாகச் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு மாத்திரம் நயனோன்மீலனம், ஜலாதிவாசம், தான்யாதிவாம், சயனாரோபணம் ஆகிய கிரியைகள் செய்யப்படும்.

**நயோன்மீலனம்:**

நயன உன்மீலனம் எனப் பிரித்து கண்திறத்தல் என்ற பொருளை இச் சொல் வெளிப்படுத்தும். ஓவியம், சிற்பம் என உருவாகி முடிந்ததும் இறுதியாகவே கண் திறத்தலைச் செய்வர். இங்கு முறைப்படி பூஜை அக்கினி காரியம் என்பவற்றை நிகழ்த்தி திரையிட்டு மூர்த்தியின் திருவுருவத்திலே தங்க ஊசியால் கண்களைத் திறந்து தானியக் குவியல் மீது விக்கிரகத்தை வைத்து பொன், தேன், நெய், தானியங்கள், பிராமணர்கள் தீபம் கண்ணாடி நிறைகுடம் சந்நியாசி, பக்த ஜனங்கள் ஆகியோரை தரிசிக்கச் செய்வர். சிற்பாசாரி சம்பாவனை செய்து கௌரவிக்கப்படுவர்.

**தான்யாதி வாசம்:**

இதன்பின் விக்கிரகத்தை தானியங்களால் மூடி வைப்பர். இதுவே தான்யாதி வாசம் எனப்படும். இவ்விரு அதிவாசக் கிரியைகளும் பிருதுவி, அப்பு ஆகிய இரு அம்சங்களுடனும் பரம்பொருளுக்குள்ள தொடர்பை வலுப்படுத்துவதாக அமைகிறது.

**ஜலாதிவாசம்:**

விக்கிரகத்தை நீரில் அமிழ்த்தி வைத்தலே ஜலாதிவாசம் எனப்படும். இதற்கென தயார் செய்யப்பட்ட சிறு தொட்டியிலே புனித தீர்த்தங்களை நிரப்பி அதனுள் ஆசனத்தின் மீது கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கி விக்கிரகத்தை இருக்கச் செய்வர். தொட்டி தயார் செய்யும் சிரமத்திற்காக பெரிய பாத்திரங்களை பயன்படுத்துவதும் உண்டு.

மீன். தவளை, பாம்பு முதலிய நீர் வாழ் பிராணிகளை பொன்னால் அல்லது வெள்ளியால் செய்து இதனுள் போடுவதும் உண்டு.

**சயனாரோபணம்:**

தானியங்களைப் பரப்பி மான்தோல் முதலியவற்றை விரித்து அதன்மேல் மெத்தை, தலையணை, விரிப்பு என்பவற்றை அமைத்து மூர்த்தியை அங்கு எழுந்தருளச் செய்து கிழக்கே தலை வைத்து மேல்நோக்கியபடி சயனிக்கச் செய்து செந்நிறத் துணியால் மூடி இறைவனை துயில வைக்கும் பாவனையே சயனாரோபணம் ஆகும். (ஆரோபணம் - ஏற்றுதல்)

**பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை:**

மூலமூர்த்தியிலுள்ள தெய்வசாந்நித்தியத்தை கும்பத்திலே ஒடுக்குமுன் விசேஷ ஸ்நபனாபிஷேகம் செய்து தீபாராதனை, பூஜைகள் செய்வது மரபு. இதுவே பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை எனப்படுகிறது.

**கடஸ்தாபனம்:**

கும்பம் வைப்பதற்கான நெல், அரிசி, பயறு, உழுந்து, எள், நவதானியம், நெற்பொரி, தர்ப்பை இவற்றை உரிய மந்திரங்கள் ஓதியவாறு முறைப்படி பரப்பி குடத்தை கழுவி நூல்சுற்றி தூபம் காட்டி இதனுள் சந்தனம், நீர், பவித்திரம், நவரத்தினம், பொன் முதலியவற்றை இட்டு மாவிலை தேங்காய் என்பவற்றை வைத்து பட்டு, பூணூல், மாலை, கூர்ச்சம், பூ, சந்தனம் இவற்றை சாத்தி கும்பாபிஷேகத்திற்குரிய பிரதான கும்பங்களை அமைத்தலே கடஸ்தாபனமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேத மந்திரங்கள் ஓதப்படும்.

**கலாகர்ஷணம்:**

பிம்பம் எனப்படும் விக்கிரகத்திலிருந்து இறையருள் சக்தியை - தெய்வசாந்நித்தியத்தை - கும்பத்திலே வரச்செய்தலே கலாகர்ஷணம் ஆகும். பலவிதமான நியாசங்கள் மூலமாக இதனைச் செய்து கடஸ்தாபனம் செய்யப்பட்ட கும்பதில் மூர்த்தியை எழுந்தருளச் செய்த பின்னர் கும்பத்தை யாகத்தில் ஸ்தாபிப்பர்.

**சலபேரம்**

பாலாலயத்தில் தற்காலிகமாக முன்னர் ஸ்தாபித்து வைத்திருந்த மூலமூர்த்தியை தர்ப்பைக் கயிற்றினால் தொடுத்து ஒரு காளைமாட்டினைக் கொண்டு அதனை அசைப்பதாகப் பாவனை செய்தவாறு சிற்பாசாரி அசைத்தெடுப்பார். அந்த பிம்பம் (விக்கிரகம்) சுத்தம் செய்யப்பட்டு மூலாலயத்தில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**விஷேச சந்தி:**

பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுற்றதும் சிவாச்சாரியர்கள் தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்தபின் ஓரிடத்தில் வரிசையாக அமர்ந்து விஷேச சந்தியாவந்தனத்தில் ஈடுபடுவர். இது சகளீகரணம், அங்கநியாசம், காயத்திரி ஜபம் மற்றும் பல்வேறு வகையான தர்ப்பணங்களும் அடங்கிய கிரியைகாகும். (தர்ப்பணம் - மந்திரநீர் சொரிந்து தேவர்கள் முதலானோரை மகிழ்வித்தல்)

**ஸ்தூபிஸ்தாபனம்:**

கருவறையின் மேல் அமைக்கப்பட்டுள்ள விமானம் ஒரு கலசத்தில் நிறைவுபெறும். பித்தளை அல்லது செப்பினால் செய்யப்பட்ட இவ்வுலோகக் கலசத்தினுள் வரகு என்னும் தானியம் நிரப்பப்பட்டிருக்கும். எவ்வளவு காலமானாலும் பழுதுபடாமல் - உழுக்காமல் இருக்கும் சிறப்பு வரகு என்ற தானியத்திற்குண்டு. அதுமட்டுமல்லாமல் இடி, மின்னல் போன்றவற்றைத் தாங்கும் சக்தியும் இதற்குண்டு என்பர். ஆகாயத்தில் எங்கும் பரவியுள்ள தெய்வ சக்தியை ஈர்த்து கருவறைக்குள் சேகரிக்கும் சக்தியுடைய ஸ்தூபி எனப்படும் இந்த விமானக் கலசத்தை அங்கு ஸ்தாபித்தலே ஸ்தூபி ஸ்தாபனமாகும். இதனைச் சிற்பாசாரி செய்வார். அப்போது அவர் கௌரவிக்கப்படுவது வழக்கம்.

**தீபஸ்தாபனம்:**

மண்டபத்திலே வைத்து சர்வாலங்காரங்களுடன் கூடிய தீபம் ஒன்றை ஏற்றி அதனை அர்ச்சித்து சுமங்கலிப் பெண் அதனை ஏந்தியபடி வீதி வலம் வரச் செய்து மூலஸ்தானத்தில் அதனை வைத்தலே தீபஸ்தாபனம் எனப்படும். இத்தீபம் கும்பாபிஷேகம் முடியும் வரை அணையாது பாதுகாக்கப்படும். இத் தீபத்துடன் பூரண கும்பம் ஒன்றும் வைக்கப்படும்.

**பிம்பஸ்தாபனம்:**

ஆதாரசிலை எனப்படும் பீடக்கல்லினை உரியமுறைப்படி பொருத்தி அமைத்தபின் அதன்மேல் நவரத்தினங்களையும் பஞ்சலோகம் முதலியவற்றையும் உரிய முறைப்படி மந்திரசகிதமாகப் பதித்து நியாசம் செய்து அதன்மேல் யந்திரத்தையும் ஸ்தாபித்து அது சேதமுறா வண்ணம் அதன்மேல் பஞ்சினைப் பரப்பி வைப்பர்.

சயனத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச் செய்து வீதி வலமாக கொண்டு வந்து இந்த ஆசனத்தின்மீது வைத்து அஷ்டபந்தன மருந்தினைச் சாத்தி மூர்த்தியை பீடத்துடன் இறுகப் பொருத்துவர்.

**யந்திரபூஜை:**

இங்கு பதிக்கப்பெறும் யந்திரமானது உலோகத்தகட்டில் வரையப்பட்ட அந்தந்த மூர்த்தியின் அம்சங்களைக் கொண்டதாக அமையும். இது கும்பாபிஷேகத்திற்கு சுமார் ஒரு மண்டலம் முன்பதாகவே தயார் செய்யப்பட்டு தினமும் அபிஷேகம் பூஜை செய்து தெய்வசாந்நியத்தை பெற்றதாக இருக்கும்.

**தைலாப்பியங்கம்: (எண்ணெய் சாத்துதல்)**

விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதும் சிவாச்சாரியர் அதற்கு எண்ணெய் சாத்திய பின் பக்தர்கள் யாவரும் தாமே தமது கைகளால் எண்ணெயை சாத்தி வணங்குவர். நல்லெண்ணய், சந்தானாதி தைலம் முதலிய வாசனை தைலங்கள் இதற்கு பயன்படும். இது பாப நிவர்த்தியை செய்யும்.

**பிம்பசுத்தி:**

மூர்த்தியின் திருவுருவத்திலுள்ள தோஷங்களை நீக்குவதற்காக விம்பசுத்தி செய்யப்படுகிறது. பலவிதமான புண்ணிய தீர்த்தங்களாலும் இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான மரப்பட்டை கஷாயங்களாலும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். இதனால் விம்பம் சுத்தம் அடைகின்றது.

**விஷேச திரவிய ஹோமம்:**

பலவிதமான சமித்துக்கள், தானிய வகைகள், பழவகைகள், நிவேதனங்கள், மூலிகைகள் என்பவற்றை அவற்றுக்குரிய மந்திரங்களை ஓதி அக்கினியில் இட்டு ஆகுதி வழங்குவர். இந்த விசேஷ திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் விஷேசமாக சொல்லப்பட்டுள்ளது. அக்கினியிலே ஒவ்வொரு திரவியங்களும் இடும்பொழுது சொல்லப்படும் மந்திரங்களின் ஒலி அதிர்வுகளும், அப் பொருட்கள் எரிந்து உருவாகும் புகை, வாசனை என்பனவும் அதிக சக்தி வாய்ந்தவை. அதனால் அடியவர்கள் யாகசாலையைச் சூழ்ந்திருந்து அவற்றை ஏற்று அருட்பொலிவையும், ஆரோக்கியத்தையும் பெறமுடியும்.

**யாகசாலையின் அமைப்பு:**

பஞ்சபூத விளக்கமாக யாகசாலை அமைவதை முன்னர் கண்டோம். யாகசாலை கோயில் பிரகாரத்தின் உள்ளே ஈசானம், அக்கினி, வடக்கு, மேற்கு, ஆகிய திசைகளில் அமையலாம். நன்கு மெழுகி தூய்மைப்படுத்திய தரையையும் நடுவிலே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும் யாகசாலையின் பிரமாணத்திற்கு ஏற்ப எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக மேலே வேயப்பட்டு வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

ஐந்து வகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையை பதங்களாக பிரிப்பதில்தான் இந்த வேறுபாடு ஏற்படுகிறது. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்து (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர். 44 சூத்திரங்களையும் இருபுறமும் இடுவது ருத்திர சூத்திரக் கிரமம் எனப்படும். இதில் 43x43=1849 பதங்கள் உண்டாகும். 34 சூத்திரங்கள் அடிப்பது விஷ்ணு சூத்திரக் கிரமம். 24 சூத்திரங்கள் அடிப்பது பிரம்ம சூத்திரக் கிரமமம். 14 சூத்திரங்கள் அடிப்பது மனு சூத்திரக் கிரமம். 12 சூத்திரங்கள் அடிப்பது ரவி சூத்திரக் கிரமம்.

ரவி சூத்திரக் கிரமத்தில் 121 பதங்கள் உருவாகும். கும்பங்களுக்கான வேதிகை நடுவில் அமையும். அதனைச் சுற்றிலும் சஞ்சார பதங்கள், ஓமகுண்டங்கள் பரிவார யாக கும்பங்கள் என்பன அவற்றுக்குரிய இடங்களில் அமையப்பெறும்.

ருத்திர சூத்திரக் கிரம யாகசாலையில் முப்பத்துமூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்திரக்கிரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், பிரம்ம சூத்திரக்கிரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்திரக்கிரமம், ரவிசூத்திரக்கிரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் அமையும்.

வசதி குறைந்த இடங்களில் ரவிசூத்திரக்கிரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர். ஒவ்வொரு வரிசையிலும் கிழக்கே சதுரக் குண்டமும், தென்கிழக்கே யோனி குண்டமும் தெற்கில் அர்த்தசந்திரக் குண்டமும் தென்மேற்கில் திரிகோண குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும் வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும் ஈசானத்தில் எண்கோண குண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திலும் கிழக்குக்குமிடையே அமையும். ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்து நான்கு, முப்பத்தாறு, பதினாறு, என்ற எண்ணிக்கையில் தூண்கள் அமையும். மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு, கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால் யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பனவும் யாகசாலையை அலங்கரிப்பன.

**யாகபூஜை:**

யாகாசலையில் பிரவேசிக்கும் சிவாசாரியார் முதலில் விக்நேஸ்வரர் பூஜை, புண்யாகவாசனம் என்பவற்றைச் செய்தபின் சூரிய பூஜை, துவார பூஜை தோரணங்கள் திரிசூலங்கள், கொடிகள் ஆகியனவற்றின் அதிதேவதைகளுக்கான பூஜை, பரிவார கும்ப பூஜை, அஷ்டமங்கல பூஜை, யாகேஸ்வரன் யாகஸேஸ்வரி பூஜை என்வற்றையும் செய்வர்.

இதன்பின் பிரதான வேதிகையிலுள்ள ஸ்நபன கும்பங்களில் பஞ்சாசனை பூஜை, ஆவரண பூஜை என்பவற்றை நிகழ்த்திப் பலவித நியாசங்கள் மூலமாக மந்திர சக்திகளைக் கும்பத்திலே பதித்துப் பூஜிப்பர்.

பின்னர் பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியார் அக்கினிகாரியம் செய்ததும் அதிலிருந்து அக்கினியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக்குரிய சிவாசாரியார்கள் தங்கள் குண்டங்களில் இட்டு அக்கினிகாரியம் செய்வர்.

இவ்வாறு பிரதான குண்டத்திலிருந்து அக்கினியை பிரித்துக் கொடுப்பது அக்கினி விபஜனம் எனப்படும்.

யாகபூஜை, பகலில் சூரிய பூஜையுடனும் இரவில் சந்திர பூஜையுடனும் ஆரம்பிக்கும்.

**ஸ்பர்சாகுதி:**

யாகசாலையிலே அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து பூஜிக்கப்பட்ட தெய்வசாந்நித்தியத்தை பிம்பத்திலே ஒடுக்குவதே ஸ்பர்சாகுதியாகும். அக்கினியுடன் கும்பத்தையும் கும்பத்துடன் பிம்பத்தையும் தர்ப்பைக் கயிறு, நூல் முதலியவற்றால் நாடீசந்தானம் செய்து (தொடுத்து) மும்முறை யாககுண்டத்திலும் மூலமூர்த்தியிலுமாக ஸ்பர்சாகுதி செய்து இறுதியில் நாடீசந்தானத்தை மூலமூர்த்தியில் சேர்த்துவிடுவர்.

**பூர்ணாகுதி:**

சிவாசாரியர்கள் தத்தம் குண்டங்களில் பூர்ணாகுதி கொடுத்துப் பிரதான குண்டத்தில் அந்த சக்திகளைச் சேர்த்ததும் பிரதான சிவாசாரியார் பிரதான குண்டத்தில் மஹாபூர்ணாகுதி வழங்கி ரக்ஷை எடுத்துக் கும்பத்திற்குச் சாத்துவர்.

**கும்ப உத்தாபணம்:**

குறிக்கப்பட்ட சுபநேரத்தில் சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு நவக்கிரகதானம், யாத்ராதானம் என்பன வழங்கிய பின் பரிசாரகரை அலங்கரித்து அவரை வாகனமாகப் பாவித்து அவர் சிரசில் பிரதான கும்பத்தை வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க ராஜோபசாரங்களுடன் வீதிவலமாக எழுந்தருளிவிப்பர்.

ஸ்தூபிக்கென அமைக்கப்பட்ட கும்பத்தையும் இதனோடு அல்லது முன்பே வலமாகக் கொண்டு வந்து முதலில் ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்வர்.

**கும்பாபிஷேகம்:**

மங்கலவாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்கப் பிரதானகும்பமும் அஷ்டவித்யேஸ்வர கும்பங்களும் மூலமூர்த்திக்கு முன்னர் வைத்து நியாசங்கள் செய்யப்பட்ட பின் அபிஷேகம் செய்யப்படும். மஹாஹவிர் நிவேதனம் என்னும் விசேஷ நைவேத்தியத்தை நிவேதித்தபின் கதவைச் சாத்திவிடுவர். இவ்வேளையில் தேவர்கள் வந்து இறைவனைப் பூசிப்பதாக ஐதீகம்.

**தசதர்சனம்:**

இதன்பின் பண்ணிசை நிகழ்த்திக் கதவினைத் திறந்து மங்கலப் பொருட்களான பசு, நிறைகுடம், தீபம், கண்ணாடி முதலியவற்றையும், சுமங்கலியையும் தரிசிக்கச் செய்வர். பின்பு தர்மகர்த்தாக்கள், உபயகாரர் முதலியவர்களுக்கு அபிஷேகம் நிகழும். (அவபிருத ஸ்நானம் என்று இதனைக் கூறுவர்)

**மஹாபிஷேகம்:**

பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய சகல பொருட்களாலும் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்து ஸ்நபனாபிஷேகம் செய்வது மஹாபிஷேகம் எனப்படும். சிவாசார்யர்களை உபசரித்து தட்சிணை தாம்பூலங்கள் வழங்கி நமஸ்கரித்து அவர்களது ஆசி பெறுவதுடன் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெறும். இரவு கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன நிகழும்.

**மண்டலாபிஷேகம்:**

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும். திரிபட்சம் (மூன்று பட்சங்கள் கொண்டது) ஒரு மண்டலம். ஒரு பட்சம் பதினைந்து நாள். எனவே நாற்பத்தைந்து நாட்களே மண்டலாபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

**சங்காபிஷேகம்:**

நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். பூஜைக்குரிய உபகரணங்களுள் சங்கு மிகத் தூய்மையானது. எப்படி ஒரு கருவறை அளவுப் பிரமாணங்களின் சிறப்பால் அதன் உள்ளே சக்தியைச் சேகரிக்கிறதோ, அதேபோல சங்கு அதன் இயற்கை அமைப்பின் விசேஷத்தால் அதனுள் விடப்படும் நீரை சக்தி மிக்கதாக்குகிறது. அந்த நீரில் வாசனைத் திரவியங்களும் மூலிகைகளும் சேர்க்கப்படுகின்றன. சங்கில் விடப்படும் நீர் புண்ணிய தீர்த்தத்திற்கு நிகராகிறது. நூற்றெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்திர சத சங்கம்) ஆயிரத்தெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சஹஸ்ர சங்கம்) வசதிக்கேற்பச் சங்காபிஷேகம் நிகழும்.

பிரதானகும்பத்தில் வலம்புரிச்சங்கும் ஏனையவற்றிற்கு இடம்புரிச்சங்கும் உபயோகிக்கப்படும். காக்கும் கடவுளாகிய மஹாவிஷ்ணு தமது கரத்தில் சங்கினை ஏந்தியுள்ளார். சங்கிலிருந்து எழும் ஓசை ஓங்கார நாதமாகும்.

சாதாரணமான ஸ்நபன கும்ப பூஜைகளில்கூட சங்கபூஜை செய்யப்படுவதுண்டு. அம்பிகையை உபாசிக்கின்ற ஸ்ரீசக்ர பூஜையில் சங்கு முதன்மை பெறுகிறது.

சங்காபிஷேகத்தில் 108, 1008 என்ற எண்ணிக்கையில் சங்குகள் சதுரம், வட்டம் முதலிய உருவக் கிரமங்களிலே அமைக்கப்பட்டு அதனுள் உரிய முறைப்படி மூலிகைகளும் வாசனைத் திரவியங்களும் கலந்த நீர் உள்ளே விடப்பட்டு அதற்குரிய மந்திரங்கள் சொல்லிப் பூஜை செய்தபின் வரிசைக் கிரமமாக அவற்றை எடுத்து இறைதிருவுருவத்தை அபிஷேகம் செய்விப்பர்.

சங்காபிஷேகத்தின் பின்னர் விசேட பூஜைகளும் திருவிழாக்களும் அன்னதானம் முதலியவையும் நடைபெற்று மண்டல பூர்த்தி என்னும் இந்த நாற்பத்தைந்தாம் நாள் கிரியையுடன் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறுகிறது.

***ஆக்கம்: பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்)***

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே!

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பேசிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே

## சைவமும் தமிழும்

ஒரு மொழி எப்போதும் மேதைகளின் கண்ணாடி என்று கூறுவர். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழ்மொழி அதன் தற்போதைய வடிவத்தில் பேசப்பட்டுவருகிறது. பண்டைய சமகால மொழிகள் பல புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மாறிவிட்டன. சில நீண்டகாலமாக இறந்த மொழியாகக் கருதப்படுகின்றன. நவீன மொழிகளில் மிகவும் உயிர்ப்புள்ள மொழியாகவும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போன்றுமுள்ளது எங்கள் தமிழ்மொழி. இத்தமிழ்மொழி சைவசமய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றது. தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழின் தொன்மை இவற்றை எடுத்துக்கூறும் முதன்மைச் சான்றுகளாக உள்ளவை தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டுகள் ஆகிய சங்கத்தொகை இலக்கியங்கள். இலக்கியங்கள் ஊடாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நால்வகை நிலங்களை வகுத்து  இயற்கையோடு இணைந்த வாழ்வை அக்காலமக்கள் வாழ்ந்தனர் என அறியக்கூடியதாக உள்ளது. அத்துடன் காதல், வீரம் என்ற கருப்பொருட்களைத் தாங்கி வாழ்ந்த காலமாகவும் சங்ககாலம் இருந்திருக்கிறது. அக்கால மக்கள் இயற்கை சக்திகளை தெய்வமாகப் போற்றி வாழ்ந்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளீர், தீதும் நன்றும் பிறர் தர வாரா" என நம்பினர். மக்களிடையே எந்தவித பேதமின்றி அந்தந்த நிலத்திற்கேற்ப தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக பல தொழில்களையும் செய்து வாழ்ந்தனர். அரசர்களை அவர்களின் வீரம், கொடை, காருண்யம், வள்ளல்மை என்பவற்றிற்காகப் போற்றி புலவர்கள் பாடிய பாடல்களும் அக்கால இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவர்கள் பாடிய பாடல்கள் மூலம் சங்ககால மக்களின் பண்பாட்டை அறியக்கூடியதாக உள்ளது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற கருத்துக்கொண்ட வரிகள் அவர்களின் அறக்கொள்கையை உணர்த்துக்கின்றது. அரசர்களை வாழ்த்தி பூமாலை அணிவித்துப் போற்றினர். வணக்கம் செலுத்துவதற்கும் விழாக்கள் எடுக்கும்போதும் பூக்கள், பூமாலைகள் அணிவித்தே போற்றினர்.

காலப்போக்கில் ஆரியருடைய படையெடுப்பால் வழிபாட்டு முறைகள் நம்பிக்கைகள் மாற்றமடைகின்றன. மக்களிடையே வருணபேதங்கள் ஏற்படுகின்றன. சங்ககாலத்தில் போற்றிக்காத்த காதல், வீரம் போய் தமிழால் அறக்கருத்துகள் போற்றப்படும் காலமாக இலக்கியங்கள் மாற்றமடைகின்றன. அறநூல்கள் தோற்றம் பெறுகின்றன. தமிழ் அறமொழியாகத் தன்னை ஆக்கிக்கொள்கின்றது. அறம் என்பது வள்ளுவரின் குறள்களால் மக்களிடையே ஆழமாகப் பதிகிறது. காலம்மாற மக்கள் வாழ்வின் கருப்பொருள் மாறுகின்றது. இறைவழிபாடு முக்கிய இடம்பெறுகின்றது. வடமொழி இறைவனின் மொழியாக வடமொழியாளர்களால் பிரசாரம் செய்யப்பட்டு அம்மொழி காலூன்றத்தொடங்கி வடமொழி மந்திரங்கள் இடம்பெறுகின்றன. பூக்களால் மட்டும் இறைவனாக இயற்கைத் சக்திகளை வழிபட்டு வந்த மக்கள் ஆரியர்களின் மந்திரங்களைக் கண்டு தடுமாற்றம் அடைகின்றனர். அதைத்தொடர்ந்து சமண சமயமும் பௌத்த சமயமும் வளர சைவசமயம் குன்றத் தொடங்கும் காலமாக வருவதைக்கண்ட நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழில் பக்திப்பாடல்களைத் தொகுத்தனர். அதன்மூலம் இறைவழிபாடு தொடர்கின்றது. தமிழ் பக்திமொழியாக பெருக்கெடுக்கின்றது.

திருநாவுக்கரசுநாயனார் ஆலயங்கள் தோறும் தரிசனஞ்செய்து சரியைத் தொண்டுகள் புரிந்து பாடல்கள் பாடினார். கிரியை வழிபாடாக திருஞானசம்பந்தநாயனாரும் யோக வழிபாடாக சுந்தரமூர்த்திநாயனாரும் பாடிய தேவாரப்பாடல்கள் மக்களை சைவசமயிகளாக ஆக்கின. தமிழில் இவர்களால் பாடப்பட்ட பாடல்கள் மக்களை பக்திப்பரவசம் அடையச்செய்தன. சைவம் வளர்வதற்கு தமிழ்மொழியின் வலிமை பேருதவியாக இருந்தது. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" போன்ற திருநாவுக்கரசு நாயனாரின் பாடல்களும், "காதலகிக் கசிந்து கண்ணீர் மல்கி" போன்ற திருஞானசம்பந்தர் பாடல்களும் "பித்தா பிறைசூடி எம்பெருமானே" என்று தொடங்கும் சுந்தரர் பாடல்களும் சமய நம்பிக்கையை எடுத்து இயம்பும் பாடல்களாக விளங்கின. மூவரும் பாடிய திருமுறைகள் சைவசமயத்தை வளர்ச்சியடையச் செய்தன. காலத்தால் பிந்தியவரானாலும் மாணிக்கவாசகர் சுவாமிகளால் பாடப்பட்ட திருவாசகம் மனமுருகக் கூடிய பாடல்களைக் கொண்டுள்ளது. திருவாசகத்தைக் கேட்டு உருகாதார் யார் உளர்? என்று பலராலும் போற்றப்படுகிறது. பக்திமான்களாயினும் சரி தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்ற கல்விமான்களாயினும் சரி திருவாசகத்தை படிக்காதவர்களாக இருக்கமாட்டார்கள். சைவநம்பிக்கை கொண்டவர்களின் இல்லங்களில் திருவாசகம் இருப்பதைக் காண்கிறோம். அவரின் பாடல்கள் கருத்தாழமும் படிக்கப்படிக்க

பக்தி உணர்வை கூட்டுவதாகவும் விளங்குவதைக் காணலாம். "தென்னாடுடைய சிவனே போற்றி என் நாட்டவருக்கும் இறைவா போற்றி" என்றும் "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்றும் தொடங்கும் பாடலில் வரும் வரிகள் அவரின் மிகுந்த அறிவையும் பரந்த மனப்பான்மையும் விளக்கி நிற்கின்றன. அவரின் ஒவ்வொரு பாடல்களும் ஓசைநயம் கவிதைநயம் மிக்கவையாகவும் கருத்தாழம் கொண்டவையாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இதனைத்தொடர்ந்து திருமூலர், காரைக்கால் அம்மையார், தாயுமானவர், சேக்கிழார் எனக் காலத்துக்குக் காலம் தோன்றிய சிவபக்தர்களின் பாக்களையும் சேர்த்து பன்னிரெண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டது. இனிமையான தமிழ்மொழியில் கேட்பவர் மனமுருகச்செய்யும் தேவார திருவாசகங்கள் தமிழ் தெரிந்த அனைத்து மக்களும் தாமாகவே அவரவர்களுக்கு விரும்பியவாறு இறைவனைத் துதித்து வணங்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது. சைவசமயம் மேலோங்க தமிழ் ஒப்பிடமுடியாத அளவுக்கு தொண்டாற்றியது. அதன் பிறகு இஸ்லாமியர் படையெடுப்பால் வட இந்தியாவில் கூடுதலான தாக்கம் ஏற்பட்டபோது தமிழ்மொழியும் தமிழர்கள் வாழ்க்கையும் இடர்பாடுகளை சந்திக்க வேண்டி இருந்ததால் புதிதாக நூல்கள் எழுதப்படாவிட்டாலும் சோழர்காலத்தில் தோன்றிய புராணங்கள், அறநூல்கள் என்பவற்றுக்கு உரைகள் எழுதப்பட்டன.

தொடர்ந்து வந்த ஐரோப்பியர் வருகையும் அவர்களின் ஆதிக்கமும் தமிழுக்கும் சமயத்துக்கும் இன்னுமொரு சோதனையான காலத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பிய நாட்டில் மதசீர்திருத்தம் ஏற்பட்டு பாதிரிமார்கள் தங்கள் கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் நோக்கத்துடன் கிழக்கு நாடுகளுக்கு வந்தனர். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்தவர்கள் மக்களின் பேச்சுமொழி மூலம் தங்கள் மதத்தை பரப்புவது எளிது என்பதை உணர்ந்து தமிழைக் கற்றனர். தமிழில் தேர்ச்சி பெற்றவர்கள் பாடசாலைகளை அமைத்து தமிழையும் கிறிஸ்தவ சமயத்தையும் கற்பித்தனர். தமிழ் மொழியில் கிறிஸ்தவ சமயத்தை பரப்ப உரைநடையில் நூல்கள், வினாவிடைகள் அச்சிட்டு பரப்பினர். இக்காலத்தில் இவர்களின் பாடசாலையில் கற்றவர்கள் பலர் இந்த மாற்றத்தை விரும்பாவிடினும் அவர்களின் போதனைகளால் ஈர்க்கப்பட்டவராயினர். இதைக்கண்ட அறிஞர்கள் சைவசமயமும் தமிழும் குன்றாது இருக்க சைவத்தையும் தமிழையும் பாதுகாக்க முயன்றனர். இலங்கையில் ஆறுமுகநாவலர் கிறிஸ்தவ பாடசாலையில் நன்கு ஆங்கிலம் படித்தவராக இருந்தமையால் அவரின் திறமையைக் கண்டு பார்சிவேல் பாதிரியார் விவிலிய நூலை மொழிபெயர்க்கும்படி கேட்டு அதை நிறைவேற்றினார். அவரின் திறமையால் அவர்கள் மதம் பரப்புவதற்கு என்ன வழியை பின்பற்றினார்கள் என்பதை உணர்ந்தும், மக்கள் சைவசமயத்தைப் பற்றி அறியாததன் காரணத்தால் இலகுவாக மதம்மாறுகிறார்கள் என்பதை அறிந்தும், வறுமை என்பதை போக்கவும், சைவமும் தமிழும் குன்றாது மதமாற்றத்திலிருந்து மக்களை விடுவிக்க நூல்கள், வினாவிடைகள் எழுதி, சமயப்பிரசாரங்கள் செய்தும், திண்ணைப்பள்ளிக்கூடம் அமைத்தும், சமய அறிவை விருத்தி செய்யும் நோக்கில் செயற்பட்டார். செய்யுள் வடிவில் இருந்த நூல்களை உரைநடையில் அச்சிட்டு வெளியிட்டார். அதனால் "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் போற்றப்பட்டார். அப்போது வாழ்ந்த கனவான்களும் படித்த அறிஞர்களும் ஆறுமுகநாவலரின் முயற்சியில் பங்குகொண்டு சைவப்பாடசாலைகளை உருவாக்குவதற்கு முன்வந்தனர். இதனால் தமிழ்மொழி அபிவிருத்தி சங்கம் தோற்றம் பெற்று தமிழ்மொழியோடு சைவமும் வளர்ச்சியடைந்து சைவத்தமிழ் அபிவிருத்தி சங்கத்தினால் சைவத்தமிழ் பாடசாலைகள் ஊர்கள் தோறும் தோற்றம் பெற்றன. தரமான ஆசிரியர்களை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையும் தொடங்கப்பெற்று சிறந்த தமிழ் ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டார்கள். அவ்வாறு பயிற்சி பெற்ற ஆசிரியர்களே தமிழையும் சைவசமயத்தையும் நன்கு கற்பித்து எமது மொழியையும் சமயத்தையும் தரமான நிலைக்கு கொண்டுவந்து காப்பாற்றினார்கள் எனலாம். இக்காலகட்டத்தில் ஆறுமுகநாவலர் தோன்றவிட்டால் "சொல்லு தமிழ் எங்கே சைவம் எங்கே" என்ற ஏக்கம் மக்களிடையே ஏற்பட்டிருக்கும். அன்று நிறுவப்பட்ட சைவத்தமிழ் பாடசாலைகளில் சில இன்னும் வளர்ச்சி பெற்று மகாவித்தியாலயமாகவும் தேசிய பாடசாலைகளாகவும் சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்து வருகின்றன.

தற்போது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எமது தாய்த்தமிழையும் சைவத்தையும் பாதுகாத்து அடுத்து வரும் சந்ததியினருக்கு கற்பித்து எமது மொழியையும் சமயத்தையும் அழியவிடாது பேணிப் பாதுகாக்க அயராது பாடுபடுகின்றனர். சைவமும் தமிழும் சமமாக வளர்ச்சி பெற்றபோதும் தமிழர்கள்

மதத்தைவிட மொழியை முதன்மையாகக் கருதுவதால் தமிழையும் தமிழ் மண்ணையும் போற்றி நிற்கின்றனர். ‘‘என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே’’ என்ற திருமூலர் கூற்றிற்கேற்பவும், "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்" என சிவபுராணத்தில் குறிப்பிடப்படுவது போன்றும் எமது தாய்மொழியில் பொருளறிந்து திருப்பதிகங்கள் பாடி இறைவனைத் துதித்து எமது சைவத்தையும் தமிழ்மொழியையும் காப்போம்.

*ஆக்கம்: Dr .ரூபி கார்த்திகேயன் DVM, MS(USA), PhD(Canada)*

**நாயன்மார்கள்**

அடியவர்களுக்கு ஒன்றென்றால் அழைத்த உடனே ஓடோடிவருவான் – இறைவன். அறுபத்திமூன்று திருவிளையாடல்மூலம் ‘ சைவமும் தமிழும் தழைத்தோங்க – இறைவனாகிய சிவனே நமக்களித்த பெரும்கொடையே ‘நாயன்மார்கள்’’.

இறைவன் முன் அனைவரும் ஒன்றே – பக்தி கொண்டு நாம் அழைத்தால் ‘பித்தா’ என்றாலும் வருவான். நம் பக்தியைச்சோதிக்க தன் கண்ணிலும் குருதி வடிப்பான். நம்பிக்’கை’ தொழுதால் – நந்தியையும் விலகி இருக்கச்சொல்வான் - கல்லைக்கட்டிக் கடலிலே போட்டாலும் அதை தெப்பமாக்கி நம்மைக்காப்பான் – பக்திகொண்டால் போதும் மனதுள் கோயில் கட்டினால் அங்கும் எழுந்தருள்வான், எம் இறைவன் சிவபெருமான். நாயன்மார்களில் – நால்வகை நெறிகளை நமக்களித்து இப்பிறவிப்பெருங்கடலை நீந்திக்கட்ட உபாயம் அளித்த சமயர் குரவர்களைப்பற்றி அறிந்து கொள்வோம்.

‘அம்மே, அப்பா என்று மூன்று வயதுக்குழந்தை அழைத்த மாத்திரத்தில் ‘அன்னையோடு காட்சி கொடுத்து ‘ஞானப்பாலைக்கொடுத்து‘ ஆளுடைய பிள்ளையை ‘திருஞானசம்மந்தக்குழந்தையாக்கி’ தோடுடைய செவியனாகி விடையேறிய எம்பெருமான் சிவபெருமான்.

அன்றிலிருந்து ‘ சைவமும் தமிழும் தன் இரு கண்களெனக்கொண்டு ‘தன் இன்னிசையால் தமிழையும் சைவத்தையும் பரப்பியவர் திருஞானசம்மந்தர். ‘சற்புத்திரமார்க்கமாகிய ‘கிரியை நெறியில் நின்று சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர் –. ‘தோடுடைய செவியன்’ என்று அழைத்து ‘காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி இறைஜோதியில் கலந்தவர்.

திருஞானசம்மந்தரும், அப்பர் சுவாமிகள் என்று அழைக்கப்படும் ‘திருநாவுக்கரசநாயன்மாரும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள். திருநாவுக்கரசரது இயற்பெயர் – மருள்நீக்கியார் – ‘சிவனால் ‘நாவுக்கரசர் என்றும் ‘ சம்மந்தக்குழந்தையால் ‘ அப்பரே என்றும் அழைக்கப்பட்டவர். சைவத்தில் இருந்து சமணசமயத்திற்கு மாறிய பொழுதில் ‘ சூலை நோய் வந்து ‘ பெரும் வேதனைக்குள்ளானார் – தமக்கையார் ‘ திலகவதியார் அளித்த ‘ திருநீறே அவரது வயிற்றுவலியைப்போக்கியது – அன்றிலிருந்து ‘ தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்’ என்று தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்தவர் ஆவார். சைவ சமயத்திற்கு மாறியதை அறிந்த சமணர்கள் – சொல்லொணாக் கொடுமைகளுக்கெல்லாம் நாவுக்கரசரை ஆளாக்கிய போதெல்லாம் – ‘ சிவன்’ நாமமே இவரைக் காத்தருளியது. ‘சரியை’ நெறியாகிய தாசமார்க்கத்தில் நின்று இறையடி சேர்ந்தார்.

இறைவனே வந்து தடுத்தாட்கொண்டவர்  - ஆலாலசுந்தராகிய ‘ சுந்தரமூர்த்தி நாயன்மார். சிவனைப்பாடுவதன்றி வேறென்ன பெரும்பணி என்று ‘ சுந்தரருக்கு தன் பிறவிப்பயனை ‘ கிழவனாய் வந்து எடுத்துரைத்தவர் ‘ சிவபெருமான்’. ‘பித்தா’ என்று அழைத்து பிறைசூடிய பெருமானின் அருள் நிறையப்பெற்றவர் சுந்தரமூர்த்தி நாயன்மார் – “தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்’ என்று சிவனே அடி எடுத்துக்கொடுக்க – அடியார்க்கெல்லாம் அடியேன் என்கின்றார் ‘ சுந்தரமூர்த்தி நாயன்மார். யோகமெனும் சன்மார்க்க நெறிமூலம் இறைவனிருக்கும் இடம் சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ என்று நம் உள்ளம் உருக்கும் பாடல்களை இவர் சொல்லச்சொல்ல  இறைவனாகியெ எம் பெருமான் சிவனே எழுதினார் – என்பதனால்யே ‘ திருவாசகம் சைவவேதம்’ எனப்போற்றப்படுகின்றது – வாதவூரர் என்ற இயற்பெயர் தாங்கிநிற்கும் ‘ மாணிக்க வாசகர் பொருட்டே – நரிகளைப்பரியாக்கினார் எம்பெருமான். ‘மாணிக்கவாசகருக்காக ‘வந்தி’ என்ற கிழவிக்கு புட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பெற்றார் எம்பெருமான். யோகமெனும் சன்மார்க்க நெறிமூலம் இறைவனோடு இரண்டறக்கலந்தவர் மாணிக்கவாசகப்பெருமான்.

பாலை, சூலை, ஓலை, காலைத் தந்து சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் சமயகுரவர்கள். அவர்கள் இறைவனோடு இணைந்த நாளை இந்தப்பாடல் மூலம் நினைவில் நிறுத்தலாம்.

‘சித்திரைச் சதயம் அப்பர் – சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப்பணி சம்மந்தர் – ஆனி மா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர் முதிய நல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்’

திருச்சிற்றம்பலம்.

*ஆக்கம்: - மீனா சுதாகரன்*

*அளித்தான் உலகெங்கும் தானான உண்மை*
*அளித்தான் அமரர் அறியா உலகம் -*
*அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்*
*அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே.*

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே*



## சனி எப்படி சனீஸ்வரன் ஆனார்?

நவக்கிரங்களில் ஒன்றான சனி பகவானை சனீஸ்வரன் என்று சிவனின் நாமத்தையும் சேர்த்து வழிபடுகிறோம். எப்படி சனி , சனீஸ்வரன் ஆனார்? சூரியனுக்கு உஷாதேவி, சாயாதேவி என்று இரண்டு மனைவிகளில் சாயாதேவிக்கு பிறந்த கிருதவர்மா என்ற மகன்தான் பின்னாளில் சனீஸ்வரபகவானாக மாறினார். கருமை நிறம் கொண்ட சனீஸ்வரனுக்கும் ஒளியாக மின்னும் சூரியனுக்கும் பகை உணர்வு ஏற்பட்டது. சனி பகவானுக்கு சிவன் மீதுதான் பக்தி அதிகமாக இருந்தது. சிவனுக்கு நிகரான நிலையை அடைய வேண்டும் என்று விரும்பிய சனிபகவான் காசிக்கு சென்று லிங்கம் ஒன்றை நிறுவி கடும் தவம் செய்தார். அவரது பக்தியை கண்டு மனம் இரங்கிய சிவபெருமான்"உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். அதற்கு சனி, "எனக்கு என் தந்தை சூரியனை விட அதிக பலமும் பார்வையும் வேண்டும். என் பார்வையில் இருந்து யாரும் தப்பக்கூடாது. என் பார்வை பட்டால் மற்றவர்கள் தங்கள் பலத்தை இழந்து விட வேண்டும். நவக்கிரகங்களில் எனக்கு மட்டுமே அதிக பலம் வேண்டும். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் தங்களுக்கு அடுத்த இடத்தை எனக்கு தர வேண்டும்" என்றார். அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் உனக்கும் ஈஸ்வரன் என்ற பட்டம் தருகிறேன். இன்று முதல் நீ சனீஸ்வரன் என்று அழைக்கப்படுவாய் என்றார். இப்படித்தான் சனிக்கு ஈஸ்வர அந்தஸ்து கிடைத்தது.

தல வரலாறு! தினகரன் என்னும் மன்னன் ஒருவன் தனக்குக் குழந்தை ஒன்று அளிக்கக் கோரி தினமும் இறைவனிடம் வேண்டி வந்தான். அப்போது ஒருநாள் அசரீரி ஒன்று கேட்டது. அந்த அசரீரியில் அவனது வீட்டிற்கு பிராமணச் சிறுவன் ஒருவன் வருவான் என்றும் அவனை வளர்த்து வர வேண்டும் என்றும் அதன் பின்பு அவனுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்றும் கூறப்பட்டது. அந்த அசரீரியில் கூறப்பட்டபடி சில நாட்களில் பிராமணச் சிறுவன் ஒருவன் வந்தான். அந்த மன்னனும் அந்த சிறுவனுக்கு சந்திரவதனன் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தான். அதன் பின்பு அரசிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மன்னனும், அரசியும் அந்தக் குழந்தைக்கு சதாகன் என்ற பெயர் சூட்டி வளர்த்தனர். இரண்டு குழந்தைகளும் வளர்ந்து பெரியவர்களாயினர். சந்திரவதனனின் அறிவுத்திறனுக்கு அவனை மன்னனாக்குவதே சரி என்கிற எண்ணத்துடன் சந்திரவதனன் வளர்ப்பு மகனாக இருந்தாலும் அவனுக்கே முடிசூட்டினான். இந்நிலையில் மன்னன் தினகரனுக்கு சனி தோசம் பிடித்தது. தினகரன் மிகவும் துன்பமடைந்தான். தனது வளர்ப்புத் தந்தை அடையும் துன்பத்தைக் கண்டு மனமுடைந்த சந்திரவதனன் சனியின் உருவத்தைப் படைத்துத் தனது தந்தைக்கு வரும் துன்பத்தை நீக்க வேண்டி வழிபடத் தொடங்கினான். இவனது வழிபாட்டில் மனமிரங்கிய சனீஸ்வர பகவான் அவன் முன் தோன்றினார். அவர், "முற்பிறவியில் செய்த பாவ வினைகளுக்கு ஏற்ப இந்தப் பிறவியில் ஏழரை நாழிகை, நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் என்று சனி தோஷத்தால் அவர்களுக்குப் பல துன்பங்கள் வருகின்றன. இந்தக் காலங்களில் வரும் துன்பத்திலும், தங்கள் கடமைகளுடன் நன்மை செய்து வருபவர்களுக்கு அவர்களது நற்செயலுக்கேற்ப இறுதியில் நன்மையும் அளிப்பேன் . அதன்படி உன் தந்தையின் முற்பிறவி பாவ வினைகளுக்குத் தகுந்தபடி அவருக்குத் துன்பங்கள் வருகின்றன." என்று கூறி மறைந்தார். அப்போது சந்திரவதனன் தனது தந்தைக்குக் கொடுக்கும் துனபங்களைத் தனக்கு அளித்து அவருடைய துன்பத்தைக் குறைக்கும்படி வேண்டினான். அவனுடைய வேண்டுதலில் மனமிரங்கிய சனீஸ்வர பகவான் அவனுடைய தந்தைக்குப் பதிலாக அவனை ஏழரை நாழிகைக் காலம் சனி தோசம் பிடிக்கும் என்றும்

அந்த ஏழரை நாழிகைக் காலத்தில் அவனுக்குப் பல துன்பங்கள் வரும். அந்தத் துன்பங்களை எல்லாம் அனுபவிக்க வேண்டும் என்றும் எச்சரித்தார். சந்திரவதனனும் அதற்கு சம்மதித்தான். சனீஸ்வர பகவானும் அதற்கு ஒத்துக் கொண்டு ஏழரை நாழிகை காலத்திற்கு அவனுக்குக் கடுமையான பல துன்பங்களைக் கொடுத்தார். அத் துன்பங்களையெல்லாம் ஏற்றுக் கொண்ட சந்திரவதனனின் முன் மீண்டும் தோன்றிய சனீஸ்வர பகவான் " தங்கள் குறைகளை உணர்ந்து இவ்விடத்திற்கு வந்து என்னை வணங்கும் எவருக்கும் சனி தோசத்தால் வரும் துன்பங்களைக் குறைத்து முடிவில் நன்மைகளை அளிப்பேன்" என்று சொல்லி மறைந்தார். பின்பு அந்த இடத்தில் சுயம்புவாகத் தோன்றினார்.அந்த இடத்தில் சந்திரவதனன் தன்னுடைய வழிபாடு, சனி தோசம் பிடித்து அதனால் துன்பப்படும் பிறருக்கும் வழிகாட்டுதலாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில், அந்த செண்பகநல்லூரில் சிறிய கோவில் ஒன்றை அமைத்து அதற்குக் குச்சுப்புல்லினால் கூரை அமைத்து வழிபாட்டுத் தலமாக்கினான். இதன்பிறகு இந்த செண்பகநல்லூர், குச்சனூர் என்று ஆகிவிட்டது. "தினகரன் மான்மியம்" என்கிற நூலில் இந்தத் தலத்திற்கான வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

வழிபாடுகளும் சிறப்புகளும்: சனிக்கிழமை- சிறப்பு வழிபாடு,ஆடிச் சனிக்கிழமை- ஆடிப் பெருந்திருவிழா சனிப்பெயர்ச்சியின் போது சனிப்பெயர்ச்சித் திருவிழா. கடவுளின் சிறப்பு : சுயம்புவாக தோன்றியவர்.விடத்தை மரம் : தல மரம், கருங்குவளை மலர்: தல மலர்,வன்னி இலை: தல இலை , காகம் : வாகனம் , எள்: தானியம் சிறப்பு : அரூபி வடிவமான லிங்கம் சுயம்புவாக வளர்ந்து கொண்டேயிருப்பதால் மஞ்சனக் காப்புக் கட்டிய நிலையில் அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும்சனிஸ்வர பகவானுக்கு பிரம்மகத்தி தோசம் பிடித்து நீங்கிய வரலாற்றுத் தலம் என்றும் கூறப்படுகிறது. இக்கோவிலில் துணைத் தெய்வங்களாக அருள்மிகு சோணைக் கருப்பண சுவாமி, அருள்மிகு லாட சன்னியாசி ஆகியோர் இருக்கின்றனர். ஆதாரம் : நெற்றிக்கண்

*ஆக்கம் : கணேசானந்தகுரு சின்னத்துரைக்குருக்கள்*
*ஆசிரியர்- ஒட்டாவா க.தொ.நு.கல்லூரி*
*விருத்திக் கலவியில் சிறப்புப்பட்டம்(ஸ்ரீலங்கா) கணக்கியல் டிப்ளமோ(கனடா)*

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.

## திருக்கோணேஸ்வரம்

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

தென்னாட்டுக்கு சிவனாகவும் உலகமெங்கும் இறைவனாகவும் இருக்கும் சிவனுக்கு பல தலங்கள் உண்டு ஒவ்வொன்றும் அற்புதமான, ஆச்சரியமான, அதிசயமான தலங்கள் ஆகும்.
ஆனாலும் சிவனின் திருத்தலம் என்றவுடன் என் மனக் கண்ணே வருவது திருக்கோணேஸ்வரம் தான் .

குரை கடலோதம் நித்திலம் கொழிக்கும் கோண மாமலை அமர்ந்தாரே !!
என்று திருஞானசம்பந்தர் என் அப்பனை பாடி மகிழ்ந்து உள்ளார் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடையம்.
ஈழத்தில்பாடல் பெற்ற தலங்கள் இரண்டு, ஒன்று கடலும் மலைகளும் சூழ்ந்து அமைந்திருக்கும் திருக்கோணேஸ்வரம், மற்றையது பாலாவியின் கரைதனில் அமைந்த திருக்கேதீஸ்வரம்.

ஈழத்தமிழ் இனத்தின் தலைநகராம் திருகோணமலையில் !!
கடல் சூழ, மலை சூழ, மரங்கள் சூழ மரத்தின் மீது மயிலாட, மந்திகள் தாவ, புள்ளினங்கள் இசை பாட, புள்ளி மான்கள் புல் மேய, மனதுக்கு இதம் தரும் இயற்கை வளம் நிறைந்த பகுதியிலே என்னப்பன் கோணஸ்வர் மாதுமை அம்பாள் சகிதம் குடியிருந்து அருள்பாலித்து வருவது அடியவர்கள் யாவரும் அறிந்ததே!!

ஐயனை தரிசிக்க திருக்கோண மலை நகர் மத்தியில் இருந்து பக்தர்கள் புறப்பட்டால் இரண்டு பக்கமும் கடல், கடலில் இருந்து வரும் இதமான காற்றோடு கோட்டை வாசலை நாங்கள் நெருங்கும் நேரம் ...
கோட்டை பிள்ளையார் என்று அரசமரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் விநாயகரை முதலில் வழிப்பட்டு விட்டு தான் எம்பெருமானைக் காண எங்கள் பாதம் அடியெடுக்கும்.
கோட்டை வாயிலை நுழைந்தவுடன், ஆலமர நிழலும், அதனைச் சுற்றி இலந்தை மரக்காடும், படி இல்லா ஏற்றமிகு பாதையும் எம்பெருமானை தேடி ஓடும் பக்தர்களின் மனதில் பக்தி பரவசத்தை ஊற்று எடுக்க வைத்து விடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!!
பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் !! எங்கள் பிணிகளுக்கு எல்லாம் மருந்தானார் !! அங்கே சென்ற பக்தர்கள் கண்களுக்கு விருந்தானார்!! அருளானார்!! பரம் பொருளானார்!!

1300 ஆம் நூற்றாண்டுக்கு முன் இந்தக் கோயில் கட்டப்பட்டது என்று அறியப்பட்டாலும் யார் கட்டினார்கள்? எப்போது கட்டினார்கள்? என்று போதிய ஆதாரங்கள் இதுவரை இல்லை.
கடவுளால் படைக்கப்பட்ட ஆலயமாகவே இது கருதப்படுகின்றது என்பது இதன் சிறப்பு.
ஆலயங்களுக்கே உரித்தான மூர்த்தி, தல, தீர்த்த, விருச்சம் அமையப்பெற்றது திருக்கோணேஸ்வரம் ஆகும். கோணேஸ்வரர் சமேத மாதுமை அம்மாள் மூர்த்தியாகவும், பாபநாசம் தீர்த்தமும், கல்லால மரம் தலவிருட்சமாக இங்கே விளங்குவது சிறப்புமிக்கது.

பங்குனி உத்திரத்தில் தொடங்கி பதினெட்டு நாட்கள் திருவிழா மிக விமர்சையாக சைவ ஆகம முறைப்படி நடைபெறும். இங்கே நடைபெறும் திருவிழாக்களில் பாபநாச தீர்த்தம் தெப்பத் திருவிழா என்பது மிகவும் சிறப்பானதாகும். பாபநாசம் என்றால் பொருள்என்ன?? என்ற கேள்வி எங்கள் எல்லோர் மனதிலும் எழும். நாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும்அந்த இடத்திலேயே நாசமாக போய் விடும் எம்பெருமான் தீர்த்தத்தில் நாங்கள் முழுகும் பொழுது !!
ஆமாம் அப்படி அதிசயசக்தி வாய்ந்த தீர்த்தம் இந்த பாபநாச தீர்த்தம் ஆகும்.

கோணேஸ்வரர் ஆலய வரலாற்றை சொல்லும் பொழுது ராவணன் வெட்டினை சொல்லாமல் முடிக்க முடியாது. ராவணன் வெட்டு என்றால் என்ன?? என்ற கேள்வி பலர் மனதில் எழும்!! கோயிலை அண்டிய பகுதியில் மலை ஒன்று இரண்டாக பிளவு பட்டிருக்கும் அதனைத் தான் இராவணன் வெட்டு என்பார்கள்.

தமிழ் மன்னனும் சிவ பக்தனுமாகிய இராவணேஸ்வரன் தனது தாய் தினசரி கோணேஸ்வரரை தரிசிக்க நெடுந்தூரம் பயணித்து வருவதினால், தன் தாய் இருக்கும் இடத்திற்கு திருக்கோணேஸ்வரத்தை கொண்டுவர ஆலயம் அமைந்திருந்த மலையை தனது வாளால் பிளந்து, கொண்டு வர எடுத்த முயற்சி தான் இராவணன் வெட்டு என்று இதிகாசங்களும் புராணங்களும் கூறுகின்றது!

சக்திக்கு ஒன்பது ராத்திரி!! சிவனுக்கு ஒரே ராத்திரி அது சிவராத்திரி !!
அந்த சிவராத்திரி விரதம் ஆனது திருக்கோணேஸ்வரத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும் சிவராத்திரி முடிந்து மறு நாள் எங்கள் கோணேஸ்வரர் அன்னை மதுமை அம்பாள் சமேதராக திருகோணமலை நகர் முழுக்க வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் செய்யும் நிகழ்வானது கோணேஸ்வர் ஊர்வலம் என்று பக்தர்கள் மகிழ்வோடு அழைப்பார்கள்.
இது ஈழத்தில் வேறு எங்கும் காணப்படாத சிறப்பு அம்சமாகும்!!

அதனால் தான் இன்றும் மக்கள் திருகோணமலையை இது கோணேஸ்வரர் பூமி என்று பெருமையாக சொல்லுவார்கள். கோணேஸ்வரரை நம்பி அங்கே பிழைப்புக்காக கால் எடுத்து வைப்பவர்கள் ஒருபோதும் கெட்டுப் போவதில்லை இறைவன் அவர்களை விட்டும் போவதில்லை. கோணேசர் புகழ் பாடவும், அவர் வரலாற்றை எடுத்தியம்பவும் இரண்டு பக்கம் போதாது இங்கு!!

சொல்லிக் கொண்டே போகலாம் ... திருக்கோணேஸ்வரத்தின் அருளையும் அதிசயங்களையும்....
இதுவரை அங்கு செல்லாதவர்கள் ஒருமுறை சென்று தரிசித்து பாருங்கள்!!
இந்த பிறவியின் பயனை நீங்கள் பெறுவீர்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று கூறிக்கொண்டு, அவன் அருளால் அவன் தாள் வணங்கி

இவன் உங்கள் செல்வா குமரன்.

நமச்சிவாய வாழ்க!! நாதன் தாள் வாழ்க!!!

*ஆக்கம்: செ. செல்வகணேசன்*

**WHAT IS ALL THIS?**
**IS THERE ANY TRUTH IN THESE?**

When I visited the UK three months ago my niece Seetha asked me the above questions, while her parents and I discussed about temple poojas. I felt sorry for Seetha as she was ignorant of the basic facts of our religion Saivaism. Seetha was born and brought up in London. Similarly, our present generations of children abroad from Srilanka are all born in well-developed Western and North American, and Australian cities, like, London, Toronto, Ottawa, Montreal, Melbourne, Sidney, etc. These cities have all modern facilities built up and enhanced from time to time by people living there. Hardly anything is there to recognize nature and its wonders. In other words, human beings' achievements completely distract children's attention from appreciating nature and the all-mighty God.

"Thirukkural" one of the famous Tamil Literature, called THAMIL VETHAM says in one the 1330 couplets as follows:

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொளாஅர் எனின்.
It reads as follows:
Kattathanaa Laaya Payanenkol Vaalarivan
Nattaal Thollar Enin.

Meaning: What is the use of education, If you do not worship the omniscient God?

You were sent to school by your parents to learn when you were 2 or 3 years old onwards. You come to know about the world through your education. By the time you are mature, aged 18 and above, you are able to think for yourself. But, you are generally distracted with man-made items and events the whole day after day. You hardly have time to appreciate the nature and the cosmos. When you see the vast oceans, and read about the Cosmos, you will start to wonder about these vast creations and your limitations to understand this vast creation and the creator!

As you have learned, this Earth is rotating on its North to South pole axis once in 24 hours. That is how we get day and night. Do you know at what speed the earth is rotating by itself? It is rotating at a speed of 1000 miles per hour. Not only that, Earth is moving in a circular path around the Sun. Earth takes one year (365 ¼ days) to complete the circular path. So, what is the speed with which the earth travels around the Sun? Scientists calculate it to be 67,000 miles per hour. Then only it can complete the orbit around the sun in one year! As you know, Earth has one moon. The Moon comes around the earth once in 29 days. As by Earth, there are other planets coming around the sun in different orbits. They are Mercury, Venus, Earth, Mars, Jupiter, Saturn, Uranus, and Neptune. Scientists say it started with Big-Bang. It is only a theory. Our ancient people say it was all created by God Sivan!

Apart from the above Sun family in the sky, we can see millions of Stars. At least 50% of them are Suns they say! The space around us and up above the sky is limitless. All these were analyzed and determined by our ancestors by intuition thousands of years ago. All our Hindu Temples have Navagraha statues (for planets) installed.

Our Religion is Saivaism. Our God is Sivan. All other Gods are also Sivan taking those forms. There can be only one God for all. We refer to that God as Sivan. He is omni-potential, omnipresent, and omniscient. He creates, protects, blesses, hides, and destroys. As a community consisting of all sorts of people with different attitudes, living conditions, and educational levels, our Religion Saivaism prescribes different paths to different categories of people. Viz. Sariyai, Kiriyai, Yogam, Gnanam. We can adopt a single path or a combination of selected paths.

Saivites follow Twelve Thirumuraikal, sung by Naayanmaar. There are 63 of them. Out of them Four Nayanmaar: Sambanthar, Navukkarasar, Suntharan and Manikkavaasagar sung the first EIGHT Thirumuraikal. Other FOUR Thirumurais were sung by Senthanaar, Thirumalikai Thevar, Thirumoolar, Karaikaal Ammaiyar and Others, and by Sekilar.

Apart from these Thirumuraikal, we have FOURTEEN Thirunerikal explaining the Saiva Philosophy called “Saiva Siththaantham”. Originals of these books were written on Palmyrah leaves specially prepared as ‘Eadu’. Presently these fourteen books are available with explanations in printed form.

| No. | Saiva Sithaantha Book | Author |
|---|---|---|
| 1. | Thiruvunthiyar | Thiruviyalur Uyyavantha Thevanar |
| 2. | Thirukalitup Padiyar | Thirukkadavoor Uyyavantha Thevanaayanar |
| 3. | Sivagnana Pootham | Meikandaar |
| 4. | Sivagnaana Siththiyar | Arunanthi Theva Naayanar |
| 5. | Irupa Irupathu | Arunanthi Theva Naayanar |
| 6. | Unmai Vilakkam | Manavaasakam Kadanthar |
| 7. | Sivaprakasam | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 8. | Thiruvarudpayan | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 9. | Vinavenba | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 10. | Pootrip Pahrodai | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 11. | Kodikkavi | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 12. | Nenjuvidu Thoothu | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 13. | Unmaineri Vilakkam | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |
| 14. | Sangatpa Nirakaranam | Kottavan Kudi Umapathy Theva Nayanaar |

We are not permanent on this earth. Daily births are there and deaths are also there. Some are fortunate to live a long life and cease to exist after 100 years. Even though humans can live for a maximum of 120 years, most people die before they reach 90 years at the present time. A few centuries ago, people died at the age of 40 to 50 years. That was because life was very hard for them and medical facilities were not available as at present.

Our Religion says Sivan is just Love. He manifests in all creatures and all other living beings including you and I. There is Truth prevailing in all these.  Love all and serve all.

*By: Selliah Theivasihamany*



திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினோடு பல தளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே

என்பதற்கமைய கனடாவின் தலைநகராக விளங்கும் ஒட்டாவா என்று அழைக்கப்படும் நகரில் சைவசிந்தனை உள்ள நல்ல உள்ளங்கள் சிலர் ஒன்றிணைந்து சிவனுக்கு ஒரு ஆலயம் அமைத்தது போற்றுதலுக்குரியது.  ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் தமிழர் அடையாளங்கள் மற்றும் அவர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்களாய் இன்றும் பார்க்கப்படுவது அவர்களின் கடவுள் சிலைகளே. குறிப்பாக சிவலிங்கம் தமிழர்களின் அடையாளங்களில் முதன்மையாகப் பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் ஐந்தொழில்களைப் புரிபவனும் , ஐம்பூதங்களை இயக்குபவனுமாகிய சிவனை ஒட்டாவா மக்கள்

மறக்காமல் சிவனுக்கு ஆலயம் அமைத்து வணங்கப்படுவது தமிழ் மக்களின் பக்தியினைச் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது. எமது சைவ சமய மக்களின் வழிபாடு இந்தியா,இலங்கை முதலிய ஆசிய நாடுகளில் சிறப்பாக வழிபாடு நடைபெறுகின்றது. இலங்கையில் ஏற்பட்ட போர் சூழல் காரணங்களால் தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற ஐரோப்பா. கனடா, அமெரிகா நாடுகளையும் நோக்கி புலம்பெயர்ந்து, தங்கள் வாழ்வாதரத்தை வளப்படுத்தியுள்ளனர்.

எமது சைவசமயம் அளவில்லாத பெருமைகளையும் எக் காலத்திற்கும் பொருத்தமாக விளங்கக் கூடியதும் இன்றைய சூழ்நிலைக்கும் இனிவரும் காலநிலைக்கும் தேவையான பொருத்தப் பாடான கருத்துக்களை என்றைக்கோ சொல்லிவைத்த முதுபெரும் அறிஞர்களையும், அவர் தந்த நூல்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது முக்காலமும் பொருந்தும் எச் சமயத்தவர்களுக்கும், எவ்வினத்தவர்களுக்கும் பயன் தரக்கூடிய அளவில் அமைந்துள்ளது.

சைவசமயம் என்பது போலிப் பகட்டுகளையும் விதிகளையும் வெறும் வழிபாடுகளையும், பூசை நடைமுறைகளையும் மட்டும் உள்ளடக்கிய மதம் இல்லை. இது வாழ்வியல் நெறி ஒழுக்கவியலின் உன்னதமான தத்துவக்கட்டமைப்பும், அறிவு ஆராய்ச்சியின் மூலம் அனைதுக் கேள்விகளும் அவற்றின் விடைகளும் பிறக்கும் மெய்யியல் என்பதை நாம் உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்ந்த சைவசமய அறிவு

பெற்றவர்வர்களாலே இன்று வரை சைவசமயம் நெறி பெற்று வாழ்கிறது.

சைவத்தமிழ் பணிகள் இடையுராது தொடர வேண்டுமாயின் சைவசமய அறிவுள்ள இளைஞர்களை நாம் உருவாக்க வேண்டும். அவர்கள் மூலம் தான் எம்சமய நெறியில் பிறந்தும் உண்மை உணராதோருக்கும், தாய் சமயம் மாறித் தம் நிலை மறந்து இருப்போருக்கும் உண்மை விளக்கம் கொடுக்கவும் அவர் தம் அறியாமை இருளை அகற்றவும் என்றும் முன்னிற்கும் செயல் வீரர்களை உருவாக்க வேண்டும்.

ஒட்டாவா நகரில் எமது முழுமுதற் கடவுளுக்கு ஆலயம் எழுப்பியுள்ளது போற்றுதலுக்குரியது இவ் ஆலயத்தில் இரு வருடங்களுக்கொரு முறை நடைபெறும் மலர் வெளியீட்டு விழா எதிர் வரும் யூலை 15ம் திகதி நடைபெற இருப்பதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகின்றோம். இவ் வேளையில் நாம் வெளிநாடுகளிலும் எமது சமயம் வீழ்ச்சியடையாது சிறந்து விளங்க எமது எதிர்கால சந்ததியினரை ஊக்கப்படுத்த வேண்டிய கடமைப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது சமய வளர்ச்சியில் அக்கறை கொண்ட எமது முன்னோர்கள் பல வழிகளைக் காட்டிச் சென்றுள்ளனர். அவற்றை நாம் பின்பற்றி எமது சைவசமயம் மேலும் சிறப்புப் பெற்றுவாழ நாம் அனைவரும் பாடுபடவேண்டும்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

ஓம் நமசிவாய

*ஆக்கம்: செ. மனோகரன், சைவசமயச் சுடர், சிவநெறிச் செல்வர்*
*தலைவர், சைவநெறிக் கூடம், பிரித்தானியா கிளை*

## தமிழும் சைவமும்

தமிழ், உச்சரிக்கும் போதே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே .தென ஒலிக்கும் இனிய மொழி"அமிழ்" தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் கண்டது என்றால் அதன் தொன்மையும் தோற்றமும் எத்தனை தமிழின் தோற்றம் பல்லாயிரம் ஆண்டுகள் என்றால் தமிழை !ஆண்டுகளோதோற்றுவித்தவர்களின் தொன்மையும் தோற்றமும் நினைத்துப் பார்த்தாலே உலகின் ஆச்சரியங்கள் எல்லாம் ஆச்சரியம் கொள்ளும்) அலெஸ் கோலியர் .Alex Collier) என்ற மொழியியல் ஆய்வறிஞர் கூறுகிறார் தமிழே மனிதன் பேசிய முதல் மொழிகடல் ஆய்வாளர் ஒரிசா பாலு கூறுகிறார் ., தமிழர்கள் உலகின் நூற்றியிருபது நாடுகளுக்கு மேல் வாழ்கிறார்கள் அதோடு நூறிட்கும் அதிகமான தமிழ் கலாச்சாரங்கள் உலகெங்கும் உள்ளன .உலகெங்கும் பதினைந்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் பெயர் கொண்ட ஊர்கள் உள்ளன . இதற்குக் காரண .அதோடு அவை பெரும்பாலும் கடலோரங்களை சார்ந்தே இருக்கின்றனம் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடல் ஆமை வழித்தடங்களைக் கண்டு அதன் வழியாக உலகம் முழுவதும் பரந்து விரிந்திருக்கின்றனர்.

தமிழர்களின் தோற்றத்தை "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி" அ .எனப் புறப்பொருள் வெண்பாமாலை பாடுகிறதுதாவது கல் தோன்றியிருந்தது ஆனால் இதர (மலை) அக்காலத்திலேயே ஆயுதங்களோடு காடு மலைகளில் சுற்றித் திரிந்து .மண் வளங்கள் தோன்றவில்லை அன்றிலிருந்தே தமிழ் மொழியின் உச்சரிப்புகளும் உயிர்த்திருக்க .வாழ்க்கை நடத்தியவன் தமிழன் தமிழர்களின் வாழ .வேண்டும் என்பது நிதர்சனம்ியல் என்பது எப்போதும் இயற்கையை சார்ந்தும் அதனையே வழிபடுவதுமாக அமைந்திருந்ததுமேலும் எம்முன்னோரைப் போற்றுவது வழிபடுவதும் . .அதனால் தான் தமிழர்கள் நாம் இன்று வரை உயிர்மைநேயர்களாக இருக்கின்றோம் .இணைந்தே இருந்தது பிறர் துன்பத்தைக் கண்டு வருந்துவதும் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வதும் எம் இயல்பிலேயே அமைந்த குணம்அன்பிற்கும் உண்டோ " வள்ளுவப் பெருமகனார் திருக்குறளில் கூறுகிறார் . அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ ."அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்? இந்தச் சிந்தனை தான் தமிழர்களிடையே சைவ சமயம் தோன்ற காரணமாக இருந்திருக்க வேண்டும்.

தமிழர்களிடையே பல மதங்கள் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றனஉதாரணமாக ., ஆசீவகம், சைவம், வைணவம், சமணம் போன்றவற்றை குறிப்பிடலாம்இதில் சைவ சமயம் இன்றுவரை தமிழர்கள் பலராலும் . இதில் நாம் கவனிக்க வேண்ட .கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதுிய ஒரு விடயம், தமிழர்கள் இந்துக்கள் அல்ல, இந்து மதம் என்பது ஆங்கிலேயர்கள் தமது நிர்வாக வசதிக்காக இந்தியாவில் இருந்த பல சமயங்களை ஒன்றாகத் தொகுத்து இந்து மதம் எனப் பெயரிட்டு கொண்டார்கள்பின்னாளில் அதை . .ஆரியர்கள் தமதாக்கி எம்மையும் இந்துவாக்கிக் கொண்டார்கள்சைவ சமயம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாக வழிபாடு செய்கிறதுமேலும் பிள்ளையார் ., முருகன், அம்மன், வைரவர் என மற்றைய தெய்வங்களையும் வழிபாடு செய்கிறதுஇதில் சிவன் யாரெனக் கேட்டால் ., திருமூலர் சொல்கிறார் அன்பே " அதாவது சைவ சமயம் என்பது அன்பு நெறி அன .என்று "சிவம்ிறி வேறொன்றும் இல்லை . சுருங்கக்கூறின், நாம் அன்பை விதைக்கும்போது இறைவன் அருள் எம்முள் தானே விளையும்.

நம்மில் பலர் கடவுளை எப்படி காண்பது எனப் பலர் ஏக்கம் கொள்வதும் உண்டுசிலர் எங்கே கடவுள் . சைவ சமயம் இருவருக்கும் ஒரே பதில் தான் கூ .என ஏளனம் செய்வதும் உண்டுறுகிறது, "உள்ளத்தில் உள்ளானடி அதை நீ உணர வேண்டுமடி, உள்ளத்தில் காண்பாய் எனில் கோயில் உள்ளேயும் காண்பாயடிநாம் பிற உயிர்கள்மீது அன்பை பொழியும் .கடவுளின் உறைவிடம் எம் உள்ளமே ஆகும் ."! போதும், தர்ம சிந்தனை கொண்டு செயல்களைச் செய்யும் போதும், பிற உயிர்களுக்கு நேரும் அநீதிகளை

எதிர்த்து நியாயம் செய்யும் போதும் இறைவனின் இருப்பை எமக்குள் காணலாம்எமக்குள் இறைவனை . அதாவது பிற உயிர்கள்மேல் .உணர முடியாது எனில் எத்தனை ஆலயம் சென்றாலும் எப்பயனும் இல்லை நாம் பொழியும் கருணையும், செய்யும் தர்மமும், நியாயத்தின் பக்கம் நிற்பதுமே இறைவனின் செயற்பாடாகும்.இதனையே சைவ சமயம் உரத்துச் சொல்லி நிற்கிறது .

ஆராச்சியாளரும் புராதன நாணய சேகரிப்பாளருமான இராமன்னர் மன்னனின் கூற்றுப்படி ., சைவ சமயம் சோழர் காலத்திலே பெரு வளர்ச்சி கண்டதுஅவர்கள் காலத்தில் தஞ்சை பெரிய கோவில் உட்பட பல . சிவாலயங்கள் கட்டப்பட்டதுசைவத்திற்கும் தமிழுக்கும் அப்படி என்ன பிணைப்பு என்று நோக்கினால் ., இறைவனை தொழுவதற்கு இன்பத் தமிழ் அன்றி வேறொரு மொழியும் உண்டோநாயன்மார்கள் அருளிய . தேவாரங்களா, மாணிக்கவாசர் அருளிய திருவாசகமா, திருமூலர் தந்த திருமந்திரமா, அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாஎல்லாமே உள்ளத்தை உருக்கி இறையருளை சுரக்கும் பாசுரங்கள் !எதைச் சொல்ல ! மேலும் கூறினால் .அல்லவா, திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பார்கள் . அத்தோடு திருப்புகழ் சந்தத்தில் குழைத்த ஆன்மீக ராகம், கேட்போரை இறைவனின் எல்லைக்கே கூட்டிச்செல்லும்இத்தனை .இன்பத் தமிழில் தேவாரம் இசைக்கையில் இறைவனே இறைஞ்சி கேட்பான் . சிறப்புகள் தமிழும் சைவமும் இணைத்திருக்கையில் உள்ளபோது ஏன் புரியாத சமஸ்கிருதம் இடை வந்து .எம் இன்பத் தமிழை இறைவனின் சந்நிதியைவிட்டு எப்படித் தான் விலக்கி வைத்ததோ !புகுந்ததோ இது தமிழர் நாம் பேரன்பினாலும் பெருந்தன்மையினாலும் செய்த தவறு தான்.

அனைவரையும் அரவணைப்பது தமிழர் எம்மாண்பு. அதை எங்கிருந்தோ வந்த ஆரியக் கூட்டம் சுயநலமாக்கிக் கொண்டது. எம்பேரன்பை கொண்டு எமக்கே சிந்தனையில் விலங்கிட்டு கொண்டது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியத்தை எழுதிய தமிழன், உலகத்துக்கே திருக்குறள் என்ற பொது மறை தந்தவன், "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என அனைவரையும் நேசித்தவன், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவன் இன்று சிந்தனை அடிமைகளாகி ஆரியப் பூட்டின் சாவியை தொலைத்தவனாய் அலைகிறான். நக்கீரரின் தமிழையே பரீட்சித்த சிவனுக்கு தமிழ் தெரியாது என்றார்கள் நம்பினோம், சமஸ்கிருதமே இறை மொழி என்கிறார்கள் நம்பினோம், "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்று உரைத்தவரின் வழிவந்தவனிடம் நாள் பார்த்துக் கோள் பார்த்துக் கருமங்கள் செய் என்றார்கள் நம்பினோம், எல்லாவற்றிக்கும் பரிகாரமே ஒரே தீர்வு என்றார்கள் நம்பினோம், அடிமையும் ஆனோம். இன்பத் தமிழை மொழியாகவும் சைவத்தை வழியாகவும் கொண்டு, சேர சோழ பாண்டியர் வழி வந்து "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" எனப் பெருநிலம் ஆண்ட வீரத்தமிழர்கள் இன்று ஏதிலிகளாக அலைகிறோம் ஒரு பிடி நிலமின்றி. இனிவரும் காலமாவது இறைவன் சந்நிதியில் எம் இன்பத்தமிழ் ஒலிக்கட்டும்! இறைவனுக்கும் எம் வேண்டுதல்கள் புரியட்டும்!

வாழ்க தமிழ்!ஓம் நமச்சிவாய !வளர்க சைவம் !

*ஆக்கம்: - செ.கஜன்*

## பயமும் பக்தியும்

ஆண்டவனிடம் பக்தியுள்ளவர்களாக, கருணையுள்ளம் கொண்டவர்களாக அனைவரும் இருபார்கள் என்று எதிரார்க்க முடியாது. இறை அன்பு என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. நாமாக இடித்துரைத்து அவர்களைக் கடவுளை வணங்கு என்பது தவறு. சகல செல்வங்களுடனும் வாழும் ஒருவன் கடவுளை நினைப்பது குறைவு என்று சொல்லலாம். அவர்கள் கடவுளை நினைக்க மறப்பதுடன்சில , சமயம் பக்தியைப் பரிகாசம் (நிந்தனை) செய்வதும் உண்டுஆனால் . இறை அன்பு உள்ளவன் பக்தியைப் பரிகரிக்கின்றான், காக்கின்றான், சிந்திக்கின்றான். வசதிகள் கூடக்கூட ஒருவனின் தெய்வ நம்பிக்கை குறைகின்றது என்று சொல்லலாம். இறைவனை நினைக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. அப்படியானவர்களுக்கு இறை நம்பிக்கை வராது. எந்த விடயத்திலும் ஒரு நம்பிக்கை ஏற்படாது. கூடுதலாக தவறு செய்பவர்கள் அவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் உண்மையை மறைப்பதும் தவறுதான் என்பதைக்கூட உணரத் தெரியாதவர்களாக இருப்பார்கள். உண்மை என்பது உறங்காத நீதி...

பக்தியுணர்வுள்ள ஒருவருக்கு பயம் இருக்கும். எதில் பயம் இருக்கும் என்றால் தவறு செய்வதில் பயம் இருக்கும். பிழை என்று தெரிந்தும் ஏதாவது சந்தர்ப்பம் சூழ்நிலை ஒருவரைப் பிழை செய்யத் தூண்டும்போது அவருக்குப் பயம் இருக்கும். அந்தப் பயமானது தேவையான ஒன்றுதான். அப்படிப்பட்ட பயம் எவருக்கும் இருக்கவேண்டும். இந்தப் பயம் கோழைத் தனமானதல்ல. கோழை என்பது துணிவற்ற பயம். இது அப்படிப்பட்ட பயம் அல்ல. இது பக்தியின் பயனால் விழையும் பயம். இந்தப் பயம் நமக்கு எப்போ ஏற்படுமோ அப்போதுதான் நாம் உண்மையான மானிட வாழ்விற்கு தகுதியுடையவர்களாக மாறுகின்றோம்.

இறைபக்தி உள்ளவர்கள் ஆண்டவன் நமக்கு நல்வழி காட்டுகின்றான் என்று நம்புவார்கள். ஒரு நல்ல விடயம் நடந்தாலும் இறைவனால்தான் இது எனக்கு நன்றாக நடந்தது என்றும்ஒரு கூடாத , விடயம் நடந்தாலும் இறைவன் ஏன் இப்படிச் செய்தான் என்றும் அவனையே நொந்து புலம்புவார்கள். எதற்கெடுத்தாலும் ஆண்டவனின் மேல் பாரத்தைப் போட்டு விடுகின்றார்கள். எமக்கெல்லாம் அப்பாற் பட்ட எமது ஆழ்மனதிற்கும் இந்த பிரபஞ்சத்திற்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது என்று நம்புபவர்கள்தான் உண்மையான பக்தி உள்ளவர்கள். ஏன் என்றால் நாம் பல நெருக்கடிகளால் நெருக்கப்படும்போது இந்தப் பிரபஞ்ச அறிவு நமக்கு உதவுகிறது. அதுதான் எமது உள் உணர்வு. ஆழ்மனதில் இருந்துவரும் பல வகையான பதில்கள் என்று சொல்லலாம். இறை நம்பிக்கை உள்ளவர்காலால் மட்டுமே இதை உணர முடியும்.

எனவே பக்தி பயத்தைத்தரும். பயம் பயனைத்தரும். நம்பிக்கை நலத்தைத்தரும். கருணை நிறைந்த உள்ளம் வேண்டும். கலங்காத மனநிறைவு வேண்டும். பயமறியாப் பக்திவேண்டும். பக்தியானது முத்தி பெறும்போது பயம் தெரியாது. இதைத்தான் பயபக்தி என்கின்றோம்ஆகவே . பயமும் பக்தியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. பக்தியாய் வாழ்வோம். பக்தியால் முத்தி பெற்று முக்கால உணர்வுபெற்று வாழ்வோம்.

*ஆக்கம்: - விஜயராணி மதியழகன்*
*ஓம் நமசிவாய!*

## சைவ இலக்கியங்கள்

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காத சிவனை முழு முதலாகக் கொண்டு அவர்தம் அருட்செயல்களையும், அற்புதங்களையும், பக்தர்களுக்காகப் புனைந்த வேடங்களைப்பற்றியும் தீந்தமிழில் கூறுவனவே சைவ இலக்கியங்களாகும். "எம் தந்தையர் நாடென்னும் பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று பாரதியார் பாடிய பாட்டினிலே "தந்தையர்" என்பது சைவ இலக்கியங்கள் படைத்த சான்றோரையே ஆகும் . செம்மொழியாம் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட இதிகாசங்களும், காப்பியங்களும் இயற்றுவதற்குத் துணை புரிந்தவை சைவ இலக்கியங்களே. அந் நூல்களே சொல், பொருள், யாப்பு, அணி என்னும் அணிகளை அழகுற எடுத்துக்காட்டின.

சைவ இலக்கியங்களுள் திருமூலரால் இயற்றப்பட்ட திருமந்திரம் மிகச் சிறந்ததும், மனித வாழ்க்கையின் மகத்துவத்தை மிக நேர்த்தியாகவும், பண்பாகவும் கூறும் நூலாகும் . இது மூவாயிரம் பாடல்களைக் கொண்டுள்ளதாகவும், ஒன்பது

தந்திரங்களைக் கொண்டுள்ளதாகவும் விளங்குகிறது. இதில் சைவ சித்தாந்தத்தின் உட்பொருள்கள் முழுவதையும் அடக்கி எழுதப்பபட்டுள்ளது. "அன்பே சிவம் ", "ஒன்றானவன் உலகில் இரண்டானவன் ….", "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் ", "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை…..", "உள்ளம் பெரும் கோவில், ஊனுடம்பு ஆலயம் …..", "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்….. " எனப் பல பொருள்நிறைந்த தோத்திரப்பாடல்களைப் பாடினார் . திருமந்திரத்தில் பக்தி மார்க்கத்திலுள்ளவை தோத்திரம் என்றும், ஞானமார்க்கத்திலுள்ளவை சாத்திரம் என்றும் அழைக்கப்பட்டன.

